# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ ஜூலை ௴ 17௳ [ந. 155

பிரஸங்கம் CLV.

## புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணியின் நடவடிக்கை.

### பொன்னமராவதியின் மா பெரும் கூட்டம்.

#### ரெஸிடெண்ட் துரை அவர்களின் உருக்கமான பிரசங்கம்.

மதராஸ் ஸமஸ்தானங்களின் ரெஸிடெண்ட், மிஸ்ட்டர் H. J. டாட் துரை அவர்கள் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தபொழுது நாட்டுக்கோட்டை நகரத்தார்களுள்ள பொன்னமராவதிக்கு ஜூலைமீ 9-ம் தேதி விஜயம் செய்தார். அன்று பொன்னமராவதி அவரை வரவேற்பதற்காகக் குதூகலமாகயிருந்தது. பொன்னமராவதியில் தேசீய யுத்த முன்னணியின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பொதுஜனக் கூட்டத்தில் துரை அவர்கள் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். வரவேற்புக் கமிட்டியின் தலைவரான மிஸ்ட்டர் V. R. M. லெட்சுமணன் செட்டியார், துரை அவர்களுக்கு உபசாரணைப் பத்திரமளிக்கும் பொழுது, பிரிடிஷாருக்கும், இந்தியர்களுக்குமுள்ள தொடர்பு, ஸமஸ்தானத்தின் ராஜ விசுவாசம், விவசாயிகளின் க்ஷேமத்தில் அக்கரைகொண்ட ஸமஸ்தான நிர்வாகி அவர்கள் உணவுப்பொருள் நிலைமையை தீர்க்கச் செய்துவரும் முயற்சிகள், இவைகளைப்பற்றி குறிப்பிட்டுப்பேசினார்.

இங்கு நடந்த பொதுக்கூட்டம் அநேகமுறைகளில் முக்யத்வமுள்ளது. கூட்டத்திற்கு அநேக ஸ்திரீகள் குழுமியிருந்தார்கள். ஸ்திரீ சொற்பொழிவாளர் ஒருவர் பிரசன்னமாகியிருந்தார். யுத்தக் கடனுக்காக நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் லக்ஷம் ரூபாய்க்கு மேல் பொருளுதவி செய்திருக்கிறார்களென்று பிரசுரிக்கப்பட்டது. எல்லாவற்றையும் விட ரெஸிடெண்ட் துரை அவர்கள் உருக்கமாக சொற்பொழிவு நிகழ்த்தினார்.

"இங்கு நான் காணும் தோற்றமானது ஸமஸ்தானம் பூராவிலும் நிலவும் நிலைமையைக் குறிப்பிடுகிறதென்றால் புதுக்கோட்டை ௱-தர்பார் அவர்களும், கௌரவ ஊழியர்களும் நமது புகழுரைக்குப் பாத்திரமாவார்கள்". யுத்தக் கடனுக்கு பொருளுதவுவது பத்திரமானது. இந்தியாவில் படையெடுப்பு ஏற்பட்டாலும் இது மோசம் போய்விடாது. பணப்பெருக்கையும் இந்த முறை தடுத்துவிடும். இங்கிலாந்திலிருக்கும் இதாலிய யுத்தக் கைதிகள் ஸர்வதேசச் சங்கத்தின் ஒப்பந்தப்படி விவசாயம் செய்து ஊதியம் பெற்றுவருகிறார்கள். அவர்களுடைய பணத்தை உபயோகித்து அவர்கள் தேசத்தின் பேரில் வீசப்படும் வெடிகுண்டுகள் உற்பத்தி செய்யப்படுமென்று தெரிந்திருந்தும் இதாலியக் கைதிகள் மீதப்படும் பொருளை பிரிடிஷ் யுத்தக் கடன் பத்திரங்களில் போட்டுவருகிறார்களென்றும் அவர் சொன்னார். இதாலியின் அதோகதி நிச்சயமென்றும், தங்களுடைய சேமிப்புப் பொருளைப் பத்திரப்படுத்துவதற்கு பிரிடிஷ கடன் பத்திரங்களில் போடுவதுதான் சிறந்த ஏற்பாடு என்றும் அவர்கள் அபிப்பிராயப்பட்டார்களாம். எதிரிகளின் அபிப்பிராயமே இவ்விதமிருக்கும்பொழுது, யுத்தக் கடன் பத்திரங்களின் மதிப்பைப்பற்றி புதுக்கோட்டை ஜனங்களுக்கு அறிவூட்டுவது அனாவசியம் என்றும் அவர் சொன்னார்.

இந்த யுத்தமானது சம்பூர்ண யுத்தம். மன்னரும், விவசாயியும் ராஜீயவாதிகளும் வித்யாசம் பாராட்டாமல் ஒன்றுபட்டிருக்கிறார்கள். துரை அவர்கள் லண்டனில் ஏ. ஆர். பி. வார்டனாகயிருந்தார். பிரிடனுக்காக யுத்தம் நடைபெற்றபொழுது, விமானத்தாக்குதல் நடைபெற்ற தினத்தன்று காலைவேளையில் துரை அவர்கள், இடிந்த கட்டடங்களின் கீழ் அகப்பட்டிருந்த ஜனங்களை அப்புறப்படுத்தும் வேலையிலீடுபட்டிருந்த பொழுது மன்னரும்,

பிராட்டியும் அந்தப் பிரதேசத்துக்கு வந்து வெடிகுண்டு வீச்சினல் கஷ்டப்படும் ஜனங்களிடம் சென்று அவர்களுக்குச் சமாதானம் சொல்லி ஆறுதலளித்தார்கள்.

லண்டனில் பலவகைப்பட்ட தேசத்தார்கள் வசிக்கிருர்கள். அங்கே மலையாளத்திலிருந்து வந்த காங்கிரஸ் வாதி ஒருவரும், ஏ. ஆர். பி. வார்டனுக யிருந்தார். வெடிக்காத ஒரு வெடி குண்டை அகற்றும் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தார். பிரிடிஷ் மக்களின் உயிரைக் காப்பாற்றும் வேலையில் அவர் ஏன் ஊக்கமுள்ளவராயிருக்கிருரென்று அவரைக்கேட்டபொழுது அவர் பதிலுரைத்ததாவது. "இதுதான் இப்பொழுது முதல்தரமான காரியம். யுத்தம் முடிவடைந்தபின் இந்தியாவின் ஸ்வதந்திர உரிமையைப்பற்றிப் பேசிக்கொள்ளுவோம்."

மற்ருெரு உதாரணத்தையும் கூறுவோம். துரை அவர்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது பிரயாணம் செய்த ஒரு கப்பலில் திருச்சினுப்பள்ளியைச் சேர்ந்த 18 அல்லது 19 வயதுள்ள ஜேஸுதாஸன் என்ற வாலிபன் வேலையிலமர்ந்திருந்தான். கப்பல் மீன்வெடியால் உடைக்கப்பட்டு மூழ்கிக்கொண்டிருந்தது. படகுகளில் பிரயாணிகளும், கப்பல் வேலைக்காரர்களும் ஏறிக்கொண்டிருந்தார்கள். பிரயாணிகள் எல்லோரும் கப்பலிலுள்ள அதிகாரிகள் எல்லோரும் கப்பலைவிட்டுப்போகும் வரையில் ஜேஸுதாஸன் தன்னுடைய வேலைத்தனத்திலிருந்து வெளிவரவில்லை. 45 ஸ்திரீகளையும், 75 குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டியிருந்தது. கப்பலைக் காலிசெய்யும் பொழுது, ஆரவாரமில்லை, ஜனங்கள் திகிலடையவில்லை. ஒவ்வொருவரும் தன்னுடைய அலுவலைச் செய்தார்கள். கடைசியாக ஒரு படகு சிக்கிக் கொண்டு புறப்பட முடியாதபொழுது தன்னுடைய உயிரையும் லக்ஷியம் செய்யாமல் ஜேஸுதாஸன் துணிவுகரமாக அதை விடுவித்தான். இவ்விதமாக பலவகைப்பட்ட தேசங்களும் பொதுவாக எல்லோருக்கும் உண்டாகியிருக்கும் அபாயத்தில் சகோதரபாவத்துடன் ஒத்துழைத்துவருகிருர்கள். ஜாதி பேதமும் மதபேதமும் கொண்டாடப்படவில்லை. எல்லோரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்து அபாயத்தை நிவர்த்திக்கவேண்டுமென்ற ஒரு நோக்கம்தான் அவர்கள் முன்நின்றது. இந்தச் சம்பவம் ஒருவருஷத்திற்குமுன் நடைபெற்றது. ஜேஸுதாஸன் என்பவர் இப்பொழுது பாரஸீக சமுத்திரத்தில் ஏதோ ஒரு இடத்தில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த சுரங்க வாரிக் கப்பலில் லெப்டினெட் உத்தியோகம் வகிக்கிருனென்றும் துரை அவர்கள் சந்தோஷத்துடன் அறிவித்தார்.

ஹிட்லர், முஸோலினி, டோஜோ ஆகிய மூவரும் ஜனநாயகம், நாகரீகம், உலக ஜன சமூகத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவர்கள். இந்த அபிப்பிராயம் நேசநாடுகளுடையது மட்டுமல்ல. அநேக ஜெர்மானியர்களும், இவ்விதமான அபிப்பிராயத்தை வெளியிடுகிருர்கள். சென்ற யுத்தத்தில் யுத்தம் செய்தவரும் ஹிட்லரை விஷத்தைப் போல் த்வேஷிக்கிறவரும், தேசப்ரஷ்டமடைந்து இங்கிலாந்தில் வசிப்பவருமான பூத தத்வசாஸ்திரியான ஒரு ஜெர்மானியர் இந்தியாவின் தாதுப்பொருள்களைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிருர். ஹிட்லர் உலக ஆதிக்கம் பெற ஆசைப்படுகிருன் என்றும் தெய்வத்தினிடம் சர்வ ஜனங்களின் பக்திதான் இதற்கு இடைஞ்சலென்றும் அவர் சொன்னுர். ஆகையால் ஹிட்லர் ஆதிக்கத்தின் கீழ் ஜெர்மனியில் தெய்வ பக்தியில்லாத கல்விதான் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது. ஒரு சமயம் ஹிட்லர் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்குச் சென்று "நீங்கள் சந்தோஷமாகயிருப்பதற்கு யார் காரணம்" என்று அவர்களைக்கேட்டான். "தெய்வானுகூலத்தினுல்தான் இது ஏற்பட்டது" என்று குழந்தைகள் பதிலுரைத்ததைக்கேட்டு ஹிட்லருக்குத் துயரம் உண்டாகிற்று. "அது தவறு. கடவுளிருப்பது உண்மையானுல், அவர் இப்பொழுது உங்களுக்கு மிட்டாய்கொடுப்பாரா" என்று ஹிட்லர் கேட்டான். குழந்தைகள் மனம் கலங்கிய" அவர் கொடுக்கமாட்டார்" என்றன. "தெய்வம் கொடுக்கமுடியாததை என்னுல் கொடுக்கமுடியும்" என்று கூச்சலிட்டு ஹிட்லர் தன்னுடைய சட்டைப்பையிலிருந்து மிட்டாய்களை எடுத்துக் கொடுத்தான். இதுதான் அச்சுநாடுகளின் கல்வி முறை.

ஜெர்மன் பூத தத்வ சாஸ்திரியின் யூதர் ஜாதியைச் சேர்ந்த பெண்ஜாதியைப் பரிகரித்து விடும்படி ஹிட்லர் அவருக்கு உத்தரவிட்டான். அவர் மறுத்துவிட்டபடியால் அவரைக் காவல் முகாமில் அடைத்துவிட்டான். அங்கே 17 வயதுள்ள வாலிபன் வயது முதிர்ந்த ஒருவனைப் பையன் களைத்துவரும் வரையில் சவுக்கால் அடித்த கோரத்தை அவர் கண்ணுற்ருர். மற்றெல்லோரையும் போல பூததத்வ சாஸ்திரியான ஜெர்மானியரும் ஹிட்லர் ஆக்ஷியின் வீழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கிருன்.

ஆகையால் உயர்வானவராகிலும், கீழ்ப்பட்டவர்களாகிலும், எந்த ஜாதியாராகிலும், தேசத்தவராகிலும் சரி, ஒவ்வொருவரும் யுத்தம் வெற்றிகரமாக முடிவடைவதற்குத் தன்னுலியன்ற அளவு முயற்சி செய்யவேண்டும். இந்திய ராஜீய விவகாரங்களை ஒத்திவைத்துவிட வேண்டும். கிராமத்தில் தீப்பற்றி விட்ட பொழுது விவகாரம் செய்து சண்டையிட்டுக் கொள்ளுவது சரியல்ல. தீயை அணைப்பதற்கு எல்லோரும் ஒத்தசை செய்யவேண்டும் என்று சொல்லி துரை அவர்கள் பிரசங்கத்தை முடித்தார்.

# ஐரோப்பாவுக்காக யுத்தம்.

## போப்பாண்டவருக்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்தி.

என்னுடைய செய்தி உங்களிடம் சேரும்பொழுது அமெரிக்க பிரிடிஷ் துருப்புகள் இதாலியப் பிரதேசத்தில் இறங்கிவிடும்.

இதாலியிலிருந்து பாஸிஸத்தையும் அதன் சின்னங்களையும் களைத்துவிடவும், அதை ஆக்கிரமித்திருக்கும் நாஸிகளை அப்புறப்படுத்தவும்தான் அமெரிக்கத் துருப்புகள் அங்கு வந்திருக்கின்றன.

மத சம்பந்தமான நம்பிக்கைகளுக்கு மதிப்பும், ஈஸ்வர ஆராதனையில் ஸ்வதந்திரமும் தான் எங்களுடைய லக்ஷியங்களின் அடிப்படையான அம்சங்கள் என்று நான் மறுபடியும் உறுதி கூறுகிறேன். வரப்போகும் யுத்த நடவடிக்கைகளில் எங்களால் சாத்யமான வரையில் மாதா கோவில்களையும் மத சம்பந்தமான ஸ்தாபனங்களையும் காப்பாற்ற நாங்கள் முயலுவோம்.

யுத்தம் நடைபெறும்பொழுது இதாலியில் தாங்களிருக்கும் நகரத்தையும் தங்களுடைய சொத்துக்களையும் தாக்காமலிருக்க நாங்கள் பிரயத்னம் செய்வோம். தங்களைப்போல நானும் உலகத்தில் அமைதி ஏற்படப்போகும் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஐரோப்பா கண்டத்திலும், ஆசியா கண்டத்திலும், துராகிருதமாக ஆக்கிரமித்திருக்கும் அக்கிரமக்காரர்கள் ஒழிந்தால்தான் இந்த அமைதி ஏற்படக்கூடும். யுத்த முயற்சிகளை விட்டுவிட்டு, சந்தோஷமாக நாமும் மனித சமூகத்தின் நலத்தில் அக்கரைகொண்ட இதர தேசங்களும், ஈஸ்வரனுடைய அனுக்கிரகத்துடன் உலக சீர்திருத்த வேலையில் ஈடுபடும் பொழுது உலகத்தில் நிரந்தரமான நியாயமான சமாதானமும் நிலவுவதற்கான ஏற்பாடுகளிலும் நம்முடைய கவனத்தைச் செலுத்துவோம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

### 10—7—43-லிருந்து 16—7—43-வரை.

**ஸிஸிலி.**—10—7—43-ம்தேதி சனிக்கிழமை அதிகாலையில், பிரிடிஷ், அமெரிக்க, கனேடியத் துருப்புகளைக்கொண்ட நேசதேசப்படை ஸிஸிலியில் இறங்கி 100 மைல்கள்வரை விமானங்களின் மூலமாயும் கடற்படை மூலமாயும் குண்டுகளை எறிந்துகொண்டு சண்டை செய்தது. 3,000 கப்பல்கள் பாராத்துருப்புகளையும், வண்டிகளையும் கொண்டுபோவதற்கு உபயோகப்படுத்தப்பட்டன. அவைகள் முன்னேறின. பல இடங்களில் இறங்கிய துருப்புகள் ஒன்றாய்ச் சேர்ந்து 30 மைல் ஸிஸிலியில் முன்னேறின. பிளாரிடியா பிரதேசம் முற்றிலும் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. மத்திய கடானிய சமவெளியில் துருப்புகள் நடமாடிக்கொண்டிருக்கின்றன. சைராகூஸ், லிகாதா, ஆவலா, பொஸ்ஸாலா, இஸ்பிகா, நோடா, அகஸ்டா, ரகூஸா, பிளாரிடியா, கடானியா ஆகிய இடங்கள் பிடிக்கப்பட்டன. அகிரிஜென்டோவில் நேசத் துருப்புகள் முன்னேறிவருகின்றன. காலாகடற்கரையில் கொடும்போர் நடந்து கொண்டிருக்கிறது.

நேசதேசச் சண்டைபோடும் விமானங்கள், நேசதேசக் கப்பல்களையும், துறைமுகங்களையும் முன்னேறித் தாக்கும் துருப்புகளையும் பாதுகாத்துக்கொண்டு பறந்துகொண்டிருக்கின்றன. துருப்புகள் நாட்டில் இறங்குவதையும் கப்பல்கள் துறைமுகங்களிற்குள் போவதையும் தடுக்க எண்ணிய எதிரிகளின் நடவடிக்கைகளிலெல்லாம் பயனற்றவையாய் செய்யப்பட்டுவிட்டது. இந்தவிதமாக டிரானியஸ், கடலிலும் மற்ற இடங்களிலும் எதிரிகளின் கப்பல்களின் மேல்செய்த தாக்குதல்களில், எதிரியின் 2 வியாபாரக் கப்பல்களும், 2 நாசகாரிகளும், 28 விமானங்களும், அநேகமாய் 2 பெரிய கப்பல்களும்கூட நாசமாக்கப்பட்டன.

பெரிய ராயல் விமானப்படையைச் சேர்ந்த குண்டுபோடும் விமானங்கள், ரீனையும் இதாலியையும் படையெடுத்தன.

**ருஷ்யா.**—ஓரல், குர்ஸ்க், பைல்கோராட் சண்டைகளின் இரண்டாவது வாரம் ஆரம்பித்திருக்கிறது. எதிரிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படுத்தியதைத் தவிர, அதிகமாய் விசேஷ மாறுதல்கள் இல்லை.

**விமானச் சண்டை.**—119-ம் முறையாகப் படையெடுக்கப்பட்டு, ஜுலைமாதம் 8-ம்தேதி கோலோனில் 1,000 டன்கள் நிறையுள்ள குண்டுகள் வீசப்பட்டன. ஜுலைமாதம் 9-ம்தேதி கெல்சன்கர்ச்சன் 47-வது தடவையாகப் படையெடுக்கப்பட்டது. ஜுலை 11-ம்தேதி பெதுயூன் பிரதேசத்தில் குண்டுகள் போடப்பட்டன.

**பஸிபிக்.**—இந்த வாரத்தில், நேசக்கட்சியினர், பெய்ரோகோவிற்கருகிலுள்ள ஸஹனு விலும், முண்டாவிற்கருகிலுள்ள அரிசி ஏற்றுமதி செய்யுமிடத்திலும் இறங்கியிருக்கின்றன. பேரிக் நதி எதிர்ப்புக்களையெல்லாம் இந்தப்படைகள் தகர்த்தன. நியூ ஜார்ஜியாவிலுள்ள ரோகோவிற்கருகில், 3-வது படையொன்று இறங்கியிருக்கிறது. முண்டாவிற்கும் பெய்ரோ கோவிற்குமிடையில் ரஸ்தாவில் ஒரு அடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. எனோகெய்இன் லெட்டும், பெய்ரோகோவின் வடகிழக்குப் பாகமும் பிடிக்கப்பட்டன. படைகளைப் புதுப்பிக்க வேண்டி பெய்ரோகோ துறைமுகத்திற்கு வந்த ஜப்பானியக்கப்பற்படைஒன்று, துருப்புக்களை இறக்காமல் திரும்பிச் சென்றுவிட்டது. குலா வளைகுடாவில் நடந்த ஒரு கடல் சண்டையில் ஒரு ஜப்பானியக் குருயிஸரும், 3 நாசகாரிகளும் மூழ்கடிக்கப்பட்டன. இன்னும் 2 நாசகாரி களும்கூட மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

**சைனு.**—ஹுபியனைப் படையெடுத்த ஜப்பானியத் துருப்புக்கள் துறத்தியடிக்கப் பட்டன. கொடாங்கில் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. தெற்கு அன்வாயில் சண்டை நடக்கிறது.

**பர்மா.**—சென்ற சில தினங்களில், மாங்டாவின் மேல் பிரிடிஷ் துருப்பகளும் இந்தியத் துருப்புகளும், வெற்றிகரமான படையெடுப்பைச் செய்தன. ஜுலை 28-ம்தேதி பட்டணத்தி லிருந்து எதிரிகள் விரட்டப்பட்டுவிட்டனர். பட்டணத்தில் பல மணி நேரங்கள் துருப்புகள் இருந்து, எதிரிகளுக்கு மிகுந்த சேதத்தை ஏற்படுத்தியபின் திரும்பின. பாடு, வாட்லட், யாட்டாங், ஸிகான், கினு, ஒயாங்காதா, டாடான், நடாங்டா, ஷுப்போ, பூதிடாங், தாங்டாரா, அக்யாப், ஸுப்பான்பென், மாங்கான் ஆகிய இடங்கள் விமானங்களால் தாக்கப் பட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**5—7—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில்வே இஞ்ஜின்கள், ஷெட்டுகள், கூட்ஸ் வண்டிகள்—வடக்கு பிரான்ஸ் (Northern France).

சுரங்கவெடி அறுக்கும் கப்பல்கள், கவசம் பூண்ட வண்டிகள்.—டென்ஹெல்டர் (Denhelder).

எதிரிக் கப்பல்கள்,—புலாயின் (Boulogne), (8 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன, ஒரு நேசதேச விமானம் காணப் படவில்லை).

இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான மிறங்குமிடங்கள்.—தெற்கு இதாலி (South Italy).

இலக்குகள்.—ஸிஸிலியிலுள்ள மார்ஸலா (Marsala), லிகாதா (Licata), ஜெர்பினி (Gerbini), ஷியாக்கா (Sciacca).

துறைமுக ஸ்தாபனங்கள்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள கோமிஸோ (Comiso), பிஸ்க்காரி (Biscari).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியக் கடல் விமான தளம்.—ஸாந்தா இஸபெல் தீவிலுள்ள ரெகாதா பே, (Rekata Bay).

கொலம்பங்காராத்தீவிலுள்ள விலா (Vila).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியா விலுள்ள பெய்ரோகோ துறைமுகம்.

ஒரு படகு.—ஆரோ (Aroe)த்தீவு.

விமான நிலயம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள ஸலாமூவா (Salamaua).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—ஷார்ட்லண்ட்ஸி லுள்ள பல்லாலி (Ballale)த்தீவு.

**6—7—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல், இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**இதாலி (Italy),**
**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள போரிட்ஸோ (Boritso).

விமான நிலயங்கள்.—ஸார்டீனியா (Sardinia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன், விமான நிலயம்.-ஜெர்மன் அரண்களுக்குப்பின்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கடற்படை.—ஸாலமன்ஸிலுள்ள குலா குடா (Kula Gulf).

நியூ ஜார்ஜியாவிலுள்ள பேய்ரோகோ (Bairoko) துறைமுகம்.

ஜப்பானிய விமான நிலயம்.—ஸலாமூவா (Salamaua).

**7—7—43.** (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily).

போக்குவரத்துக்கள்.—ஸிஸிலி (Sicily).

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள மிலோ (Milo).

ராணுவ லக்ஷியங்கள்—ஸிஸிலியிலுள்ள மஸாரா (Mazara), பிஸாரி (Bizari), எம்பெடாக்கிள் (Empedocle), கோமிஸோ (Comiso), போரிட்ஸோ (Boritso).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua), கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).

நியூ ஜியார்ஜியாவிலுள்ள பேய்ரோகோ (Bairoko) துறைமுகம்.

விமான நிலயம்.—காஹிலி (Kahili), பல்லாலி (Ballale).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்ட்டர்முனை (Cape Gloucester).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-நியூ கினியிலுள்ள லே (Lae).

ஜப்பானியச் சைனியங்கள்.—போப்டுயி (Bobdui).

விமான நிலயம்.—டெனிம்பர் தீவிலுள்ள ஸெலாரு (Selaru).

ரயில்வே தளம்.-பர்மாவிலுள்ள பாடு(Padu), வெட்லெட் (Wetlet), யுவாட்டாங் (Ywataung), ஸிகான்கினு (Zigonkinu), ஓயின்காதா (Oyingatha), டாடான் (Taodon) நாடாங்லா (Nadaunghla) ஷ்வேபோ (Shwebo).

சிறிய படகு.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

**8—7—43.** (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—தொழிற்சாலை ஸ்தலம்—ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

எதிரி விமான நிலயங்கள், ரயில்வே லக்ஷியங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily), ஸார்டீனியா (Sardinia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-நியூ கினியிலுள்ள கெலாமுனை (Kela point).

கட்டடம்.—நியூ கினியாவிலுள்ள பின்ஸாபென் (Finschhafen).

ஸாலமன்ஸிலுள்ள விலா (Vila).

விமான நிலயம்.—பூயின் பெய்ஸிலுள்ள காதெலி (Gatheli).

விமான நிலயம்.—டிமோரிலுள்ள கொபாங் (Koepang).

ரயில்வே ஜங்ஷன்.—பர்மாவிலுள்ள தாழி (Thazi).

பாலம்.—மூ (Mu) நதி.

ஜப்பானிய ஸப்ளைக் குவியல்கள்.—பர்மாவிலுள்ள கெமெய்ங் (Kamaing), ஸெடான் (Seton).

சாமான் சேகரித்து வைக்கும் கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).

சேனைகள் தங்கியிருக்கும் குடிசைகள்.—பர்மாவிலுள்ள தாங்டாரா (Thaungdara).

இலக்குகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

**9—7—43.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-இலக்குகள்-பிரானஸிலுள்ளசெயின்ட் ஓமர் (St. Omer).

கப்பல்கள்.-செர்பார்ச்(Cherbourg) தீபகற்பம்.

நீராவி யந்திரங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France)

இரவு.—மத்திய நர்—ஜெர்மனியிலுள்ள கெல்சென், கொர்ச்சென்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி லக்ஷியங்கள்.—கிரீட் (Crete).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள கோமிஸோ (Comiso), பிஸ்காரி(Biscari).

ரயில்ரோட்.—கால்டானிஸெட்டா (Caltanisetta).

கப்பல்கள்.—போர்டோ எம்பெடோக்கிள் (Porta Empedocle).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமான ங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியா விலுள்ள முண்டா (Munda), நியூகினியி லுள்ள ஸலாமூவா (Salamaua).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள மாங்டா (Maungdaw).

பர்மாவிலுள்ள மித்னி (Myitgne)பாலம்.

**10—7—43.** (சனிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்—பிரான்ஸி லுள்ள கேயன் (Caen), அப்பிவில்லி (Abbeville), மாபெர்டிஸ் (Maupertus).

இலக்குகள்.—செயின்ட் ஓமர் (St. Omer). (3 நேசதேச விமானங்கள் காணப்பட வில்லை. 1 எதிரி விமானம் சுட்டுத்தள்ளப் பட்டது).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

பாதுகார்த்தல்.—ஸிஸிலிக்கருகிலுள்ள நேச தேசக் கப்பல்கள்.

விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily).

சேனை தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—ஸிஸிலியிலுள்ள (Catania).

எதிரிக் கப்பல்கள்.—கிரீட் (Crete).

ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும் தரைமீதுள்ள விமான ங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

சிறிய க்ருயிஸர்கள், நாசகாரிகள்.—நியூ ஜார்ஜியா (N. Georgia)விற்கருகில்.

இலக்குகள்.—ஸாலமன்ஸிலுள்ள கொலம் பங்காரா (Kolombangara), கனுங்கா (Ganangga).

நியூ கினியிலுள்ள மடாங் (Madaung), ஸலா மூவா (Salamaua).

ராணுவ லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

சிறிய படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

பர்மாவிலுள்ள புரோம்—டாங்குப் (Prome-Taungup) பாதை.

**11—7—43.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—பல மின்சார நிலயங்கள்—பிரான்ஸி லுள்ள பெதூயூன் (Bethune) பிரதேசம்.ல நீராவி யந்திரங்கள், படகுகள், துறைமுகங்களி லுள்ள தண்ணீரடைப்புகள்.—பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள ரெஜியோ டி கலாபிரியா (Reggio Di Calabria), விபோ வலென்ஷியா (Vibo Valentia).

கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily).

விமான நிலயங்கள்.—ஸிஸிலி (Sicily).

விமானச் சண்டைகள்.—கிரீட் (Crete).

விமான உதவி.—ஸிஸிலியில் முன்னேறித் தாக்கும் நேசதேச தரைப்படைகள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமா னங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழு வதும்.

தூரக்கிழக்கு (Far East).

பேன்போல் விமான நிலயம்.—டிமோரிலுள்ள கொபாங் (Koepang).

கடல் விமான தளம்.—அரேப்தீவிலுள்ள டாபர்பேன் (Taberfane).

விமான நிலயம்.—டச்சு நியூகினியிலுள்ள பாபோ (Babo).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

ஸ்ப்ளைப் படகுகள்.—ஹுவான் குடா (Huon Gulf).

எதிரிச் சைனியங்கள்.—ஸலாமூவா (Salamaua).

விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள பொ கெய்ன்வில்லி (Bougainville).

நியூஜியார்ஜியாவிலுள்ள மூண்டா (Munda).

கொலம்பாங்காராவிலுள்ள விலா (Vila).

அலூஷினிலுள்ள கிஸ்கா (Kiska).

பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

மாலெய்க் (Mawlaik).

ஸ்டீமர்கள்.—ஐராவதி (Irrawaddy).

லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**6—7—43** (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

பைல்கோராட் (Byelgorod) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ரேண்டோவா.—(Rendova). (2 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

நேசதேசக் கப்பல்.—அராபுரா (Arafura) கடல்.

**7—7—43.** (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஓரல் (Orel), குர்ஸ்க் (Kursk), பைல்கோராட் (Byelgorod) பிரதேசங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் (Darwin) துறைமுகம். (9 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 7 நேச தேச விமானங்கள் காணப்படவில்லை).

**8—7—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

பைல்கோராட்.—(Byelgorod) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸாலமன்ஸிலுள்ள ரெண்டோவாத் (Rendova) தீவு.

**9—7—43** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

பைல்கோராடு (Byelgorod) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டைகள்.—மத்திய ஸாலமன்ஸ் (Central Solommons).

**10—7—43** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**ருஷ்யா (Russia).**

குர்ஸ்க் (Kursk) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

நேசதேசச் சைனியங்கள்.—கியூகினியிலுள்ள நாஸா பேக்கருகிலுள்ள ஸலாமூவாப் பிரதேசம்.

**11—7—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய விமான நிலயங்கள்.—ஓரெல் (Orel), குர்ஸ்க் (Kursk).

பைல்கோராட் (Byelgorod).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**12—7—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

பட்டணம்.—இங்கிலாந்தின் தென்கிழக்குக் கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

பைல்கோராட் (Byelgorod) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸாலமன்ஸிலுள்ள ரெண்டோவா தீவு (Rendova).

# யுத்தக் குறிப்புகள்.

**ஸிஸிலியில் படையெடுப்பு.** ஐரோப்பாவுக்காக யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. பகடை உருட்டியாகிவிட்டது. வெகுநாளாக எதிர்பார்த்த இரண்டாம் போர்முனை ஆரம்பமாகிவிட்டது. மிஸ்ட்டர் சர்ச்சில் வெளியிட்ட பிரகாரம் கடல் மூலமாகவும், தரைமூலமாகவும் நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. நேசதேசத் துருப்புகள் ஜுலை 10-ம் தேதியன்று விடியற்காலத்தில் ஸிஸிலிக் கடற்கரையில் 100 மைல்கள் நீளத்திற்கு இறங்கின. முதலில் விமான மூலமாகவும், கிளைடர்கள் மூலமாகவும் துருப்புகள் எதிரியின் வரிசைகளுக்குப்பின் இறங்கின. துருப்புகள் புறப்படும்பொழுது கவனித்த ஒருவர் “இது ஒரு சிற்றுண்டி விருந்தென்றும், துருப்புகள் சல்லாபம் செய்தன, கொக்கரித்தன, ஸிகரெட் குடித்தன, பல்லைக்கடித்தன, பரிகாசப் பேச்சுகளில் ஈடுபட்டன” என்று சொல்லுகிறார்.

1,000 விமானங்கள் கடற்கரைத் தற்காப்புகளின் பேரில் குண்டுகளைப் பொழிந்தன. பல தேசங்களைச் சேர்ந்த 3,000 கப்பல்கள் முக்கியமாக பிரிடிஷ் அமெரிக்கக்கப்பல்கள் படைகளை இறக்குவதற்கு உபயோகப்படுத்தப்பட்டன. பிரிடிஷ் விமானப்படை கடற்கரையிலுள்ள பீரங்கிகளை நொருக்கிவிட்டன. சுரங்க வாரிகள் சுரங்கங்களை அகற்றிவிட்டன. அங்கிருந்த இதாலிய இ-படகுகள் கப்பற்கூட்டத்தைக்கண்டு ஓடிவிட்டன. காலநிலை சரியாகயில்லாத போதிலும், படைகள் இறங்கிய தோரணையும், சந்தர்ப்பமும் சிலாக்கியமாயிருந்தது. எதிரிப் பிரதேசத்தில் சில முக்கியமான ஸ்தலங்கள் நமது வசமாகிவிட்டன. கடற்கரைப் பிரதேசம் பத்திரமாகக் காப்பாற்றப்படுகிறது. பல துறைகளிலிறங்கிய துருப்புகள் ஒன்றுசேர்ந்து 30 மைல்கள் முன்னேறிவிட்டன. கடற்தளமான ஸிரக்யூஸும், துறைமுக நகரங்களான லிகாடா, அவோலா, பொஸோலே, இஸ்பிகா, நொடோ, காமிஸோ, அகஸ்டா, நாரோ முதலியவைகள பிடிபட்டுவிட்டன. பிரிடிஷ் 8-ம் படை ஸிஸிலியின் துறைமுகமான கடானியாவைத் தாக்குகின்றன. மெஸ்ஸினாவை நோக்கி கபடமாக முன்னேறுகின்றன.

அச்சு நாடுகளின் எதிர்ப்பு வலுவடைந்துவருகிறது. எதிரியின் 3,00,000 இதாலியர்களும் 1,00,000 ஜெர்மானியர்களும் உள்ள படைகள் இன்னும் யுத்தம் துவக்கவில்லை. ஸிஸிலி மலைப்பிராந்தியம். நேசநாடுகளுக்கு ஸப்ளைகள் கடல்மார்க்கமாகவும், விமான மூலமும் வரவேண்டும். இது மிகவும் சிக்கலானதும் அதிக அபாயத்துடனும கூடிய நடவடிக்கை.

எதிரிக்கும் அதிக சிரமம்தான். இதாலியின் குதி பாகத்திற்கு இரண்டு இருப்புப்பாதைகள்தானிருக்கின்றன. விமானங்களிலிருந்து இவைகள் தாக்குதலுக்குட்பட்டவை. மெஸ்ஸினா ஜலசந்தியில் பிரிடிஷ் கடற்படை ஆதிக்கம் பெற்றிருக்கிறது.

எதிரி பலஹீனமடைந்து ஆனால் தோல்வியை அங்கீகாரம் செய்யாத சமயத்தில் அடிகள் விழஆரம்பித்துவிட்டன. இந்த சங்கடத்திலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு என்ன செய்வதென்று எதிரி விழித்துக்கொண்டிருக்கிறான். அதிகமான படைகளைக்கொண்டு வரவும், காலஹரணம் செய்வதென்றும் நினைக்கிறான். இதேசமயத்தில் நேசதேசங்களுக்குள் பிளவு ஏற்படுமென்றும் அல்லது நேசதேசங்களின் யுத்த தந்திரத்தில் தவறுதல் உண்டாகுமென்றும் அவன் எதிர்பார்க்கிறான். வார்ரோ போன்ற வீரருக்கும் பொழுது கேனே யுத்தமும் நடைபெறலாம். அச்சுநாடுகளுக்கு ஏற்பட்ட துர்தசைக்கு அனுபவமில்லாத யுத்த தந்திரியான ஹிட்லர்தான் காரணம். நேசதேசங்கள் ஹிட்லரின் அடிவயிற்றில் நன்றாகவும் பலமாகவும் அடித்துவிட்டார்கள். ருஷ்யக் கரடியானது எதிரியின் குறவளையை பலமாகக் கவ்வி விட்டது. ஹிட்லரின் யூ படகுகளைப்போல் ஸிஸிலியின் மலைப்பிராந்தியம் சிறிது இடையூறாகவிருக்கும். ஆகிலும் இறுதியில் வெற்றி பெறுவது நிச்சயம்.

ஸிஸிலியில் படையெடுப்பு ஐரோப்பாவுக்காக நடைபெறப்போகும் யுத்தத்துக்கு முற்போக்கானது. அச்சுநாடுகள் இதை அறிவார்கள். தன்னுடைய தாய்நாட்டைக்காப்பாற்றுவதற்காக இதாலியத் துருப்புகள் யூகோஸ்லாவியாவிலும், ஆல்பேனியாவிலும், கிரீஸிலும், பால்கன் நாடுகளில் நேசதேசத் தாக்குதலை எதிர் பார்த்து நிற்கின்றன. புதிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக மிஸ்ட்டர் ஸ்டிம்ஸன் லண்டனுக்கு விஜயம் செய்திருக்கிறார். கிரீஸை முதலில் விடுதலைசெய்ய வேண்டுமெனறு முடிவுசெய்து விட்டதாகத் தெரியவருகிறது. ஜெனரல் கிராட்டுக்கு விருந்தளித்தபொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்டு பின்வருமாறு பேசியிருக்கிறார். "நாங்கள் பல திக்குகளிலும் நடவடிக்கை நடத்தப்போகிறோம். பிரான்ஸ் மூலமாகவும் நாங்கள் படையெடுக்கப்போகிறோம். தெற்கு பிரான்ஸிலுள்ள மக்களுக்கு ஸ்வதந்தரமளிப்பதுடன் வட பிரான்ஸிலுள்ளவர்களுக்கும் ஸ்வதந்திரம் அளிப்பதும்தான் எங்களுடைய லக்ஷியம்.

வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனையின் புதிர்.** ருஷ்யப் போர்முனையில் என்ன நடவடிக்கை நடைபெறுகிறது. ஜூலை, 6, 7 தேதிகளில் மூன்று பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட ஜெர்மன் முன்னேற்ற யுத்த வேகம் குன்றிவிட்டது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகளிடம் பேச்சு மாற்றல் உண்டாகிவிட்டது. முன்னேற்ற யுத்தத்தை விட்டுவிட்டு தர்காப்பு முறைகளைக்கையாண்டு வருகிறார்கள். ருஷ்யர்கள்தான் முதலில் தாக்க ஆரம்பித்தார்களென்று அபாண்டமாய்ச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இது என்ன, பாசாங்கா, மோசடியா, அல்லது தோல்வியை ஒப்புக்கொள்ளுவதா.

ருஷ்யப் போரில் ஜெர்மானியர்கள் ஈடுபடுத்திய டாங்கிகளையும், விமானங்களையும், துருப்புகளையும் இந்தப் போருக்காக அவர்கள் வெகுநாட்களாக தயாரித்த முஸ்தீப்புகளையும் கவனித்தால், பலமான ஒரு தாக்குதல் செய்யவேண்டுமென்று அவர்கள் உத்தேசித்தார்களென்பதில் சந்தேகமில்லை. தங்களுடைய தாக்குதலைப்பற்றி அவர்கள் குறைகூறுவதிலிருந்து அவர்களுக்கு ஒரு லாபமும் கிடைக்கவில்லையென்றும், அல்லது இருவகையிலும் தங்களுக்கு அநுகூலமான வகையில் பிரகடனம் செய்வதென்று நிச்சயித்துவிட்டார்கள் போலும். வெற்றிகிடைத்தால் அதைப்பற்றி பிரசுரம் செய்வதென்றும், அல்லது ருஷ்யாவுக்கு வெற்றி கிடைத்தால் அதைக்குறைவுபடுத்திச் சொல்லுவதென்றும் ஜெர்மனி தீர்மானித்துவிட்டது.

ஆரம்பமாயிருக்கும் போர்முனையின் ஸ்தல அமைப்பு 'S' என்னும் எழுத்தை மாற்றி எழுதும் முறையிலுள்ளது. மேல்பக்கத்திலுள்ள உப்பலான ஸ்தலம் ஓரலைநோக்கியிருக்கிறது. இது ஜெர்மானியர் வசமிருக்கிறது. இங்கிருந்து மாஸ்கோவுக்கு முன்னேறுகிறதென்று ஜெர்மானியர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். அடிபாகத்திலுள்ள உப்பலான ஸ்தலம்தான் குர்ஸ்க் என்னும் பிரதேசம். இது ருஷ்யர்வசமிருக்கிறது. இந்த முன்னணி ஸ்தலத்திலிருந்து கார்கோவை நோக்கி முன்னேற ருஷ்யர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். ஆகையால் ருஷ்யர்கள் முன்னேறுவதைத் தடுப்பதற்காகவோ அல்லது ஒத்திவைப்பதற்காகவோதான் ஜெர்மானியர்கள் முன்னேறித்தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

மேலும், ஜெர்மன் முன்னேற்ற யுத்தத்தின் லக்ஷியம் சொல்பமானதுதான். அதாவது குர்ஸ்க் முன்னணி முனையை அப்புறப்படுத்துவதன் மூலம், தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை நிவர்த்தி செய்து, ஏற்படப்போகும் புதியபோர்முனைகளுக்கு அங்கிருக்கும் துருப்புகளை அனுப்ப வசதிசெய்து கொள்ளுவது.

ஆக்கிரமிப்பு ருஷ்யாவிலுள்ள ஸ்தலங்களுக்குப்பின் உள்ள பிரதேசங்களையும் போக்கு வரவு மார்க்கங்களையும் பலப்படுத்த ஜெர்மனி தற்காப்பு முறைகளை அனுஷ்டித்துவருமென்ற

ஹேஷ்யங்கள் சமீபகாலத்தில் புலப்பட்டுவிட்டன. ஒன்று யூக்ரேனை சமாதானப்படுத்துவது. மற்றொன்று கொரில்லாப்படைகளை நாசமாக்கும் வேலை.

ஜெர்மானியர்களின் நோக்கங்கள் எவ்வகையாயினும் ஏராளமான சாவு கொடுத்தும் அவர்களுக்குத் தகுந்த லாபம் கிடைக்கவேயில்லை. யுத்தத்தைப்பற்றி ஜெர்மனியில் சொல்லும் விருத்தாந்தங்களில் ஏமாற்றம் காணப்படுகிறது. ஆகிலும் ருஷ்யர்கள் எந்த முனையிலும் அசர்ந்து விட்டால் அங்கு பலமான படைகளைப் புகுத்திவிடவும் ஜெர்மனி சக்தியுள்ளதென்றும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இப்பொழுது விளைந்துவரும் நஷ்டம்போல் மேல்மேலும் ஜெர்மனிக்கு நஷ்டம் ஏற்பட்டால், ஏதாவது சாக்குப்போக்குச்சொல்லி ஜெர்மனி யுத்தத்தையே நிறுத்திவிடக்கூடிய சம்பாவிதமும் உண்டு.

வி வி வி வி வி

**சரித்திரப்போக்கு ஒரே மாதிரிதான்.** "யூ படகு யுத்தம் தோல்வியுற்றது. மிதந்து செல்லும் சவப் பெட்டிகளில் போகாதீர்கள். யுத்தத்தை முடித்துவிடவேண்டும். ஹிட்லரை ஒழியுங்கள்" என்ற வாக்கியங்களடங்கிய துண்டுப் பிரசுரங்கள் கியல் என்னுமிடத்தில் ஜனங்களுக்கு வழங்கப்பட்டன. கியலில் கலகமும் மூனிச்சில் கலவரமும், ரூர் பிரதேசத்தில் வேலை நிறுத்தமும் ஏற்பட்டுவிட்டது. சரித்திரம் மறுபடியும் முன்போல் நடைபெறப்போகிறது போலிருக்கிறது. சென்ற யுத்தத்தில் கியலிலுள்ள கடற்படையினர் கலகம் செய்ததுதான் ஜெர்மன் சாம்ராஜ்ய வீழ்ச்சிக்கு முற்போக்கான நடவடிக்கை. 1918-ம் வருஷம் நவம்பர் மாதம் 3-ம் தேதியன்று வடக்குக் கடலில் பிரிடிஷ் கடற்படையுடன் போர் தொடுக்குமாறு ஜெர்மனி தன்னுடைய கடற்படைக்கு உத்தரவிட்டது. ஜெர்மன் கடற்படை கீழ்படியாமல் கலகம் செய்தது. புரட்சி ஏற்பட்டது. நவம்பர் 9-ம் தேதியன்று இரண்டாவது வில்லியம் மன்னர் பட்டம் துறந்தார்.

ஜெர்மனியில் கலகம் ஏற்படும் நிலைமை வந்துவிட்டதென்று நாம் சொல்லவில்லை. ப்ரஷியாவிலுள்ள உயர்தர மக்களும், ராணுவ அதிகாரிகளும் தொடர்ந்து யுத்தம் செய்வார்கள். நாஸி நிர்வாகமும், இறக்க மன்னியில் கலகத்தை அடக்கி விடக்கூடும். கியலிலும், மூனிச்சிலும், ரூர் பிரதேசத்திலும் நிதர்சனமாக உள்ள குழப்பத்தை கவனித்தால் ஜெர்மனியின் அதோகதி ஆரம்பமாகிவிட்டதென்றும் நாஸிகளின் ஆக்ஷியின் முடிவுடன்தான் இது பூர்த்தியடையுமென்றும் தோன்றுகிறது.

வி வி வி வி வி

**கடற்படை நிலைமை.** ஜூலை மாதம் 7-ம் தேதி ஒலிபரப்பியபொழுது "யூ படகுகளின் வேலை சிரமமாகயிருக்கிறது. நாம் அதிக கிலேசத்தை அனுபவிக்கவேண்டும். எதிரியின் கை ஓங்கி வருகிறது, எதிரி தன்னுடைய தற்காப்பு முறைகளை பலப்படுத்திவருகிறான்" என்று கடற் தளபதி டுயட்ஸெள பிரலாபித்தார். மத்தியதரைக்கடலுக்கு யூ படகுகளை அனுப்ப முடியாதென்று அவர் சொல்லிவிட்டார். சில முகாந்திரங்களைக்கொண்டு இதாலியக் கடற்படையும் மத்தியதரைக்கடலிலுள்ள நேசதேசக் கப்பல்களைத் தாக்கும் வேலையில் ஈடுபடவில்லை. இதன் பயனாக நேசதேசப் படைகள் ஸிஸிலியிலிறங்கியபொழுது ஒரு எதிர்ப்பும் ஏற்படவில்லை. மத்தியதரைக்கடலில் நேசதேசத் துணைக்காவல் கப்பல்கள் தாராளமாக நடமாடுகின்றன. மத்தியதரைக்கடல் மார்க்கமாகச் சென்றால் நன்னம்பிக்கை முனை மார்க்கத்தைவிட 9,000 மைல்கள் பிரயாணக் குறைவு ஏற்படுகிறது. ஆகையால் மத்தியதரைக்கடலின் ஆதிக்கத்திலிருந்து 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்களின் லாபம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

கில்டு ஹாலில் மிஸ்டர் சர்ச்சில் பிரசங்கத்தில் சொன்னபிரகாரம் ஜூன் மாதத்தில் ஒரு சாமான் கப்பல்கூட நமக்கு நஷ்டமாகவில்லை. இதிலிருந்து கப்பல் பிரயாணத்திலேற்பட்ட அபாயம் குறைந்துவிட்டது. யுத்த அபாய இன்ஷ்யூரென்ஸ் விகிதமும் குறைந்துவிட்டது. அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வரும் கப்பல்கள் விசேஷமாகப் பாதிக்கப்பட்டுவிட்டன. கடற்கரையோரமாகச் செல்லுவதற்கு ஏற்பட்ட விகிதத்தை ப்ரெஸில் மூன்றில் ஒரு பங்கு குறைத்து விட்டது. முதல் முதலாக இப்பொழுதுதான் உற்பத்தி ஸ்தானங்களில் ஏராளமாகக் குவிந்து கிடக்கும் யுத்த தளவாட சாமான்களை ஏற்றிச்செல்லுவதற்கு கப்பல் வசதி ஏற்பட்டிருக்கிறது. பிரெஸிலிலுள்ள காபிக்கொட்டையும், சிலோனிலுள்ள தேயிலையும், குபாவிலுள்ள சர்க்கரையும் தென் அமெரிக்காவிலுள்ள கோகோ இலையும் ஏற்றுமதி செய்யப்படலாம். அமெரிக்காவிலுள்ள சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தின் காரியதரிசி பின்வருமாறு எழுதுகிறார். "சர்வதேச வியாபார மார்க்கங்களில் ஏற்பட்டிருந்த காடின்யம் இளகிவிட்டது. சிறிய தேசங்களின் ஜீவாதாரமான வியாபார ரத்தம் மறுபடியும் தாராளமாக சஞ்சாரம் செய்ய ஆரம்பித்துவிட்டது. யுத்தப்போக்கு மாறிவிட்டது. கடல்கள் மூலமாக பலதேசங்களுக்கு ஏராளமான மாமிசமும், உருளைக்கிழங்கும் மாவும்,

பாலும், முட்டைகளும் கோதுமையும், டாங்கிகளும், மோட்டார்களும், யந்தர பீரங்கிகளும் விமானங்களும் போய்ச்சேருகின்றன.

கடல் யுத்தத்தில் சம்பவித்திருக்கும் விசேஷ மாறுதல் ஆச்சரியகரமானது. பிரிட்டனைப் பட்டினிபோட்டுக் கொன்றுவிட வேண்டிய உத்தேசத்துடன் யூ படகுகள் கட்டப்பட்டன. யுத்த ஆரம்பத்தில் காரிபியன் கடலிலும், வடக்கு அட்லாண்டிக்கிலும், ஆர்க்டிக் கடலிலும் ஏராளமான கப்பல் நஷ்டங்கள் ஏற்பட்டன. இந்தச் சங்கடமான சமயத்தில் யுத்த வெற்றி பிடித்தவர்களும் ஷின்வேலைச் சேர்ந்தவர்களும் காமன்ஸ் சபையில் பிரதம மந்திரியை நிந்தித்து வந்ததையும் சட்டசபையின் தீர்மானத்தின் மூலமாக யூ படகு அபாயத்தை நிவர்த்திக்க முயன்றதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இப்பொழுது குறைகூறியவர்களுக்குப் பதிலுரைக்கும் தருணம் பிரதம மந்திரிக்கு வந்துவிட்டது. கில்டு ஹால் சொற்பொழிவின் ஆரம்பத்தில் யூ படகுகளின் தோல்வியைப்பற்றி அவர் பிரஸ்தாபித்ததற்கும் இதுதான் காரணம்போல் தோன்றுகிறது.

வி வி வி வி வி

**ஏழாவது வருஷம், ஏழாவது மாதம், 7-ம் தேதி.** சீன ஜப்பானிய யுத்தம் ஜூலை 7-ம் தேதியன்று 7வது வருஷத்தை ஆரம்பித்தது. சைனாவில் மாதங்களும் தேதிகளும் பின்வருமாறு குறிக்கப்படுகின்றன. ஸெப்டம்பர் 4-ம் தேதிக்கு. 9-4 என்றும், ஜனவரி 6-ம் தேதிக்கு 1—6 என்றும் குறிப்பிடப் படுகிறது. ஆகையால் 7-வது வருஷ யுத்த ஆரம்பதினம் ஜூலை மாதம் 7-ம் தேதியாகையால் இதை விளக்கும் முறையில் 7—7·7. அதாவது மூன்று ஏழுகளென்று சொல்லுகிறார்கள். சைனா 6 வருஷங்கள் பூர்த்தியான விழாவைக் கொண்டாடிய பொழுது ஜப்பான் பேசாம லிருந்துவிட்டது. இதன் காரணம் நன்குபுலப்படுகிறது. ஜப்பான் சம்பந்தப்பட்டமட்டில் இந்த ஆறு வருஷங்களில் அதற்கு அவமானமும், அவக்கேடும் ஏற்பட்டிருக்கின்றன. சைனா விலுள்ளவர்கள் தீரத்துடன் போர்புரிந்திருக்கிறார்கள். 6 வருஷ யுத்தத்துக்குப்பின் சீனா வுக்கு வெற்றிச்சின்னங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. காட்டுமிராண்டிகளின் பிடிப்பி லிருந்து பிராசீனமான நாகரீகம் விடுதலை பெறும் தருணம் சமீபித்துவிட்டது. உள்நாட்டில் குழப்பமிருந்தபோதிலும் 6 வருஷகாலங்களாக எதிரியின் தாக்குதலைச் சைனா சமாளித்திருக் கிறது. ஆயுதபலக் குறைவுயிருந்தபோதிலும் சீனாவின் ராணுவ தந்திரிகள், கொரில்லா யுத்தத்தையும், காலஹரணம் செய்யும் முறைகளையும் உள்நாட்டிலுள்ள மலைப்பிராந்தியங் களுக்குப் பின்வாங்கும் ஏற்பாட்டையும் கையாண்டுவந்தார்கள். பலமான புரட்சி ஏற்பட்ட தின் மூலம்தான நவீன சைனா தேசம் தோன்றிற்று. அதன்பிறகு சீனாவின் முன்னேற்றமும் அதிகரித்தது. பழமையான தொழிற்சாலைகளுக்குப் பதிலாக புதிய தொழிற்சாலைகள் நிர் மாணிக்கப்பட்டன. ஜனசமூகத்திலும் ஒரு புதிய அமைப்பு உண்டாகிற்று. இந்த மாறுதல் களின் விளைவுகள் இப்பொழுது புலப்படுகின்றன. ஆறாவது வருஷ யுத்தம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. செகியாங்—கியாங்க்ஸி மாகாணத்தில் ஜப்பானியரின் முன்னேற்றம் முறியடிக்கப்பட்டது. தான்யக் களஞ்சியமான பிரதேசம் காப்பாற்றப்பட்டது. யாங்ட்ஸீ நதிப்பிரதேசத்திலிருந்து ஜப்பானியர்கள் விரட்டப்பட்டார்கள். ஜப்பானைத் தாக்குவதற்கு சைனா ஒரு முக்கிய தளமாக அமைக்கப்படுகிறது. சமீபகாலத்தில் சீனப்படைகளுக்கு சீன விமானப்படையே உதவியளித்திருக்கிறது. சைனாவிலுள்ளவர்கள் லபூடாவிலுள்ளவர் களைப் போல் வேதாந்திகளென்று இனிமேல் நினைக்கவேண்டாம். அது போர்புரிய ஆரம்பித்துவிட்டது. தூரக்கிழக்கிலுள்ள காட்டுமிராண்டிகளின் முன்னேற்றத்தை சீனா தடுத்துவிட்டது. சீனாவிலுள்ள 450 மிலியன் ஜனங்களும் உலகத்தின் ஜன சமூகத்தை ரக்ஷிக்கும் முறையில் பெரும் பங்கெடுத்துக்கொண்டுவிட்டார்கள். சீனாவைப் பற்றி நேசதேசங்கள் பொருத்தமான அநேக புகழுரைகளை வெளியிட்டிருக்கிறார்கள். மிஸ்டர் சர்ச்சில் சியாங் கேஷேக்குக்கு அனுப்பிய புகழுரையை இங்கு பிரசுரிப்போம்.

“சீனா ஏழாவது வருஷ யுத்தத்தை ஆரம்பிக்கும் பொழுது பிரிடிஷ் மக்களின் நல் வரவை உங்களுக்கு விடுக்கிறேன். பதினெட்டு மாதங்களுக்குமுன் சீனாவும், பிரிடனும் அந்தரங்கமான நண்பர்களானது முதல் இரண்டு தேசங்களுக்கும் அநேக சங்கடங்கள் ஏற் பட்டுள்ளன. வட ஆபிரிக்காவிலும், யாங்ட்ஸீ நதிக்கரையிலும் நமக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளிலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் வருங்காலத்தில் ஏற்படப்போகும் வெற்றிக்கு சூசகங்கள் காணப்படுகின்றன.

“பிரிடனும், சைனாவும் வருங்காலத்தில் நமக்கு உண்டாகப்போகும் சிரமங்களையும் மகத் தான போர்களையும் மதித்துப் பார்க்காமலிருக்கமுடியாது. யுத்தப் போக்கு நமக்கு ஸ்பஷ்ட மாகத் தெரியவருகிறது. நாம் இப்பொழுது முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டோம். உலகம் பூராவிலும் அக்கிரமமாக யுத்தம் செய்கிறவர்கள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும் காலத்தை பூர்ண நம்பிக்கையுடன் எதிர் பார்க்கலாம்.

"யுத்தத்துக்குப் பின் உலக சீர்திருத்தம் என்ற மகத்தான திட்டத்தை நாம் நிறுவும் பொழுதும் நாகரீகக் கலைகள் மறுபடியும் ஓங்கி விளங்கும் பொழுதும், யுத்த சமயத்தில் பரிசீலனை செய்யப்பட்டு உருவாகியிருக்கும் பிரிடிஷ் சீன ஒத்துழைப்பானது சமாதானகால பிரச்னைகளைத் தீர்க்கும் வேலையிலும் சிறந்த முறையில் ஈடுபடுமென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்."

வி வி வி வி வி

**தளங்களுக்காக யுத்தம்.** ஆஸ்திரேலிய அமெரிக்கப் படைகள் முண்டாவிலும் ஸலாமூவாவிலும் சாவதானமாக முன்னேறுகின்றன. ஜப்பானியர்கள் உதவிப்படைகளைக் கொண்டுவரப் பிரயத்தனம் செய்ததை குலா வளைகுடாவில் நடைபெற்ற கடல் யுத்தத்தில் நேசதேசங்கள் முறியடித்துவிட்டார்கள். நேசதேசப் படைகளின் கடல், விமான ஆதிக்கம் இந்தப் பிராந்தியத்தில் நிலைநாட்டப்பட்டது. ஜப்பான் மகத்தான ஒரு கடல் யுத்தத்தை நடத்தவேண்டும் அல்லது தென்மேற்குப் பஸிபிக்கிலுள்ள ஒவ்வொரு தளமாக இழந்துவிடவேண்டும். சென்ற வருஷத்தில் குடால்கனுர், பூனு, கோனு முதலியவற்றை ஜப்பானிழந்தது. இவ்வருஷத்தில் முண்டா, ஸலாமூவா, லே, ரபால் முதலிய இடங்களை வேறுவகையிலிழந்துவிடப்போகிறது.

சென்ற வருஷம் நடைபெற்ற நிகழ்ச்சிகள் முன்னேற்ற முறையில் ஏற்பட்டாலும் உண்மையாக தற்காப்புக்காகத்தான் நடைபெற்றன. ஜப்பானைத் தாக்குவதைவிட ஆஸ்திரேலியாவைக் காப்பாற்றுவதுதான் முக்கிய நோக்கமாயிருந்தது.

குடால்கனுருக்குப் பிறகு ரஸ்ஸல் தீவுகளைத் தாக்கியதை விஞ வேறு போர்கள் நடைபெறவில்லை. இதற்கு மனித பலம், ஸப்ளைகளின் குறைவுதான் காரணங்கள். மத்திய காலத்தில் நாம் சும்மாயிருந்துவிடவில்லை. சென்ற வருஷத்தில் நியூகாலிடொனியா, நியூ ஹெப்ரிடிஸ், லோகி, குடால்கனுர், ரஸ்ஸல் தீவுகள் போன்ற தளங்களை நாம் விஸ்தாரம் செய்தோம். துருப்புகள் ஓய்வெடுத்துக்கொண்டு முஸ்தீப்புகள் பெற்றன. புதிய விமான தளங்களும் அமைக்கப்பட்டன.

இப்பொழுது ஆரம்பிக்கப்பட்ட முன்னேற்ற யுத்தம் இந்த தளங்களிலிருந்து துவக்கப்பட்டது. தற்காப்பு லக்ஷியத்தை விட்டுவிட்டு முன்னேறித் தாக்கும் முறை கையாளப்படுகிறது. இதே காலத்தில் தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள எதிரியின் வலிமையைக் குலைப்பதற்காக ஒரு பெரிய படை தயாராகி வருகிறது. நேசதேசங்களின் இறுதி லக்ஷியமான ஜப்பானை அடைவதற்கு ஏற்கனவே பிடிபட்ட தளங்களும் பிடிபடக்கூடும் தளங்களும் பாய்ச்சல் தளங்களாகும்.

வி வி வி வி வி

**லஞ்சம் கொடுத்தல்.** ஷான் ஸமஸ்தானங்களிலுள்ள கெண்டங்க், மாங்க்பானையும் சமஷ்டி மலேயாவில் சேராத கெடா, பெர்லி, கெலாண்டான், டிரங்கென்னு முதலிய இடங்களையும் சியாமுக்கு ஜப்பான் தானம் செய்துவிட்டது. இது ஒருவனைக் கொள்ளையடித்து மற்றொருவனுக்கு நன்கொடை கொடுப்பது போலாகும். காமன்ஸ் சபையில் இதைப்பற்றி பிரச்னம் பண்ணினபொழுது "இவை பிரிடிஷ் பிரதேசங்கள்" என்று மிஸ்ட்டர் ஆந்தனி ஈடன் சொன்னர். இந்த தானத்தின் அடிப்படையான நோக்கமென்ன. விசுவாசமுள்ள ஒரு நண்பனுக்கு வெகுமதியா அல்லது சமீபத்தில் சண்டையிட்ட ஸான்கிராமை சந்தோஷப்படுத்துவதற்காகவா, அல்லது நேசதேசப் படையெடுப்பு ஏற்படும்பொழுது துரோகம் செய்யக்கூடிய ஒரு அயல் வீட்டானுக்கு லஞ்சம் கொடுத்ததா? எண்ணம் எவ்வாருகிலும், இந்த தானத்தைக்கண்டு ஒருவரும் ஏமாந்துவிட மாட்டார்கள். ஒன்றுக்கும் உபயோகமில்லையென்று மதித்து ஷான் ஸமஸ்தானங்கள் 1909-ம் வருஷத்தில் பிரிடனுக்குக் கொடுக்கப்பட்டது. ஸியாமுக்கு இவைகள் தொந்திரவே ஒழிய லாபமானதல்ல. மலேயா நாடுகள் செழிப்பானவையல்ல.

வி வி வி வி வி

**உணவுப் பொருள் பிரச்னை.** டில்லியில் நடைபெற்ற உணவுப் பொருள் மகாநாட்டின் நடவடிக்கைகளையும் நாடெங்கும் நடைபெறும் விவாதங்களையும் நோக்கினுல் உணவுப்பொருள் பிரச்னை நெருக்கடியான நிலைமையை யடைந்துவிட்டதென்றும் இந்தத் தீர்ப்பது மிகவும் சிரமசாத்தியமான காரியமென்றும் தோன்றுகிறது. சாதாரண காலத்தில் ஏராளமாகயிருந்த சாமான்கள் இப்பொழுது தேவைக்குக் குறைவாக இருக்கின்றன. கட்டாக்போன்ற இடங்களில் தாராளமாய் வியாபாரம் நடைபெறலாமென்ற ஏற்பாடும் பயன்படவில்லை. தேசத்தில் உணவுப்பொருள், ஆடைகளின் குறைவு இல்லாமலி

ருக்கவேண்டுமானல் கட்டுப்பாடு அவசியமிருக்கவேண்டும். பங்கீடு செய்வதென்றும், அரசாங்கத்தார் நேராகவோ, அல்லது ஏஜண்டுகள் மூலமாகவோ வியாபாரம் செய்வதென்றும் முடிவு செய்துவருகிருர்கள். விலைவாசிகளும் சாமான்களின் அளவும் நிர்ணயிக்கப்படலாம். ஆனல் சாமான்களின் சிலாக்கியம் சந்தேகமானது. சாமான்கள் நன்ருயில்லாதிருந்தால் ஜனங்கள் கொள்முதல் செய்யமாட்டார்கள். ஸர்க்கார் வியாபாரம் செய்வதற்குப் போதுமான சாமான்களைச் சேகரித்து வைப்பது, பெரிய கிட்டங்கிகள் அமைப்பதும், சாமான்களை மற்ற இடங்களுக்குக் கொண்டுபோக போக்குவரத்து சாதனங்களை அமைப்பது போன்ற காரியங்கள் நடைபெறவேண்டும். இவைகளெல்லாம் பயன்படாவிட்டால் பங்கிடுவதுதான் கடைசியான சிறந்தமுறை. அவ்விதம் செய்தால்தான் ஜனங்கள் பட்டினிகிடக்காமல் ஜீவிக்கமுடியும். யுத்த முயற்சியில் ஈடுபடும் தொழிலாளர்களும் நகரங்களைவிட்டு நாட்டுப்புறங்களுக்குச் செல்லாமலிருக்க முடியும்.

வி வி வி வி வி

**புகழப்படாத சரிதை.** இவ்விதமான நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கும் பொழுது அமைதியுடனும், பொருமையுடனும் முணுமுணுப்பன்னியிலும் கஷ்டங்களைப் பொருத்துக்கொண்டு ஜீவித்துவரும் ஏழை மக்களின் தீரத்துக்கு நமது புகழையும் அனுதாபமும் உரித்ததாகும். வேதாந்திகளுள்ள நாடானபடியால் ஜனங்கள் இதற்குமுன் அவர்களுடைய முன்னேர்கள் அனுபவித்த பஞ்சத்தையும், எதிரி முறியடிக்கப்பட்டபின் உண்டாகப்போகும் சுபிக்ஷத்தையும் ஒப்பிட்டு இப்பொழுது உண்டாகியிருக்கும் கஷ்டங்களைச் சந்தோஷமாக அனுபவித்துவருகிருர்கள். இதற்குமுன் அநாவசியமான அநேக பழக்கவழக்கங்கள் இப்பொழுது தள்ளுபடியாகிவிட்டன. தேத்தண்ணீர் குடிப்பதும், புகையிலை உபயோகிப்பதும் கைவிடப்பட்டன. விளக்குகளை உபயோகிக்க முடியாமல் அஸ்தமன சமயத்திலேயே அவர்கள் தூங்க ஆரம்பிக்கிருர்கள். ஸ்திரீகள் நெல் குத்துகிருர்கள். கல்யாணங்களும் திருவிழாக்களும் சிக்கன முறையில் நடைபெறுகின்றன. துணிமணிகளின் நீளம் குறைவுபடுத்தப்படுகிறது.

இதுதான் ஏழைமக்களின் நிலைமை. அவர்கள் சாவதானமாகவும், தைரியத்துடனும் வெற்றியில் நம்பிக்கையுடனும் ஜீவனம் செய்துவருகிருர்கள்.

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த முயற்சி.** பருத்தி ஆடைகள், பருத்தி நூல் முதலியவற்றின் கட்டுப்பாடு சம்பந்தமாக ஸர்க்கார் அவர்கள் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள். அதன்படி தொழிற்சாலையிலிருக்கும்பொழுதும் சில்லறையாக விற்பனை செய்யும்பொழுதும் நிலைபெறவேண்டிய உயர்தரமான விலையை நிர்த்தாரணம் செய்வதுடன் 1943-ம் வருஷம் ஜூலை 31-ம் தேதிக்குப்பின் சரக்குகளில் போடவேண்டிய முத்திரைகளையும் குறிப்பிடுவார்கள். அவ்விதம் அடையாளம் போடப்பட்ட துணிகளையும் நூலையும் உற்பத்திசாலையிலிருந்து அவைகளைப் பேல்களாக பார்ஸல் செய்ததிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாகவும் பூராவான பேல்களாகயிருக்கும் கேஸ்களில் 45 நாள்களுக்குள்ளாகவும் வெளியேற்றிவிடவேண்டும். உற்பத்திசாலையைத் தவிர மற்ற இடங்களில் பேல்களாகக் கட்டியபின் 90 நாட்களுக்குப்பின் அவைகளை வைத்திருக்கக்கூடாது.

பார்ஸல் செய்தபின் 6 மாதங்களுக்குள்ளாகத் துணிகளையும், நூலையும் சில்லரை வியாபாரிகள் விற்றுவிடவேண்டும்.

1943-ம் வருஷம் ஆகஸ்டு 1-ம் தேதிக்குமுன் உற்பத்தி செய்யப்பட்ட துணியையும், நூலையும் முழு பேல்களாக 1943-ம் வருஷம் ஆகஸ்டு 31-ம் தேதிக்குப்பின் வைத்திருக்கக்கூடாது. 1943-ம் வருஷம் அக்டோபர் மாதம் 31-ம் தேதிக்குள் எப்பேர்பட்ட துணியையும், நூலையும் வியாபாரிகள் சில்லரையாக விற்றுவிடவேண்டும்.

1943-ம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதியன்று தங்கள் வசமுள்ள இருப்புகளை உற்பத்தி செய்கிறவர்களும், வியாபாரிகளும் கணக்கெடுத்து 1943-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15 தேதிக்குள் ஸர்க்காருக்கு அனுப்பவேண்டும்.

வியாபாரியும் உற்பத்தியாளருமில்லாத எவரும் சாதாரணமான தேவைக்கு அதிகமான சரக்குகளை வைத்திருக்கக்கூடாது. உற்பத்தி செய்கிறவரும் துணி சம்பந்தப்பட்ட மட்டில் 3-மாதத்திய உற்பத்தியையும், நூல் சம்பந்தமாக இரண்டுமாத உற்பத்திக்கு வேண்டியவையும் சேமித்து வைத்துக்கொள்ளலாம்.

# சைனு-ஜப்பான் யுத்தம்.

## ஏழாவது வருஷம் 7—7—43.

## செய்திகள்.

### 1. மிஸ்ட்டர் அந்தோனி ஈடன்.

"பரஸ்பரம் செல்வபோகத்தோடு" வாழ்வது என்கிற ஜப்பானியக்கொள்கை மிருகத் தன்மையாலும், கொடுமைகளாலும் அடையமுடியாது என்றும், யார் கத்தியை உபயோகிக்கிருனே அவன் கத்தியாலேயே அழியவேண்டும் என்றும், ஜப்பானியர்களுக்கு ஒரே முடிவாக ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்ற எண்ணம் நம் மனதில் ஒரே திடமாய்ப் பதிந்துள்ளது. நமது நேசநாடுகளுக்கு முக்கியமாக, நமது சைனு தேசத்திற்கு நாம் கடமைப்பட்டிருக்கிருேம். தூரக்கிழக்கிலே தாக்குதல் செய்துவரும் ஜப்பானியத் தாக்குதல்களை அழித்து, நியாயத்திற்கெனப் போரிடும் எல்லோரும், சமாதானமாய் வாழ்வதற்கு வேண்டியவைகளைச் செய்வதிலும் நாம் சேர்ந்துகொள்ளவேண்டிய கடமைப்பட்டிருக்கிருேம். அத்தகைய சமாதானமும், நிலைமையும் ஏற்படாதவரையிலும் தூரக்கிழக்கில் பிரிடிஷ்காரர்களுக்கு முக்கியமான தான சமாதான வியாபார விஷயங்கள் நடைபெறுவதற்கு ஹேதுவில்லாமலிருக்கும். நமது ஒன்றுபட்ட முயற்சிகளால், ஜப்பானியர்கள் அழிக்கப்படுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. இந்த தேசத்திலுள்ள நமக்கு இக்காரியம் சுலபமானதில்லை என்பதும் தெரியும்.

ஐரோப்பாவில் எதிரிகளின் ஆக்கிரமிப்புக் கொடுமை குறைந்துகொண்டே வருகிறது. நமது குண்டுபோடும் விமானங்களினுல் செய்யப்படும் தாக்குதல்கள் எல்லாம் நாம் செய்யப் போகிற பெருந்தாக்குதல்களுக்குச் சின்னங்களேயாகும்.

ஐரோப்பாவில் அச்சு நாட்டினரைத் தாக்கப்படும் ஒவ்வொரு செயலும், நாம் ஐக்கிய நாட்டினர் எல்லோரும் ஒன்று சேர்ந்து முழு பலத்தோடு ஜப்பானியரைத் தாக்குவதற்கான நாளை சீக்கிரத்தில் கொண்டுவருவதாகும்.

### 2. அயில்வின் பிரபு.

சைனுவில் முன்னேற்றம், தேசத்தின் சக்தியையும், உதவியையும் அதிகப்படுத்துதல் இவைகளில் ஒழுங்கான கட்டுப்பாடுகளும், பூர்ணமான நம்பிக்கையும், வெற்றியடையும் குறிப்பும், எண்ணித்துணியும் தன்மையும், ஜனங்களினிடையே ஒவ்வொருவரிடமும் நிகழ்கிறது. எல்லாவற்றையும்விட ஒற்றுமையும், எதிர்த்த எதிரியை நாசப்படுத்தும் வரையில் சண்டையிடுவது என்ற ஒரே தீர்மானத்தோடும் சீன மக்கள் இருக்கின்றனர்.

### 3. பீல்டு மார்ஷல் வேவல் பிரபு.

எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கடமைகள் முதலில் சீன மக்களின் நற்குண விசேஷங்களையும், வீரத்தையும் கவனிக்கவும், அந்த வீர மக்களுடன் சிநேகம் செய்துகொள்ளவும் செய்தது என்ற விஷயத்தில் நான் பெருமையடைகிறேன். இந்தியாவின் ராஜப்பிரதிநிதி என்ற பெயரோடு சீனுவுடன் வைத்திருக்கும் கூட்டுறவை நான் இன்னும் தொடர்ச்சியாக வைத்துக்கொள்ளுவேன் என்ற விஷயத்தில் நான் சந்தோஷப்படுகிறேன். இந்தியாவிற்கும், சீனுவிற்கும் உள்ள சம்பந்தம் நெருங்கியதாகவே இருக்கிறது. ஒருவருக்கொருவர் உள்ள நம்பிக்கையையும், மன ஒற்றுமையையும் தெளிவுபடுத்திய பயங்கரமான கஷ்ட நஷ்டங்களில் இருவரும் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர். நான் இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாக இருக்கப்போகும் இனிவரும் வருஷங்களில் இவ்விரு ஆசிய மக்களுக்குள் திடமான சம்பந்தம் ஏற்பட்டுவிடும் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

### 4. மிஸ்ட்டர் ஜான் கர்ட்டின்.

உங்கள் தேசத்தில் நடந்துவரும் ஆக்கிரமிப்புக்களை கடைசிவரை எதிர்த்து நிற்பதென நீங்கள் கொண்டுள்ள தீர்மானமான உறுதியிலிருந்தும், ஐக்கிய தேசத்தின் பலம் அதிகரிப்பதிலிருந்தும் சைனு தேசத்திற்குள்ள பெருங்கஷ்டங்கள் சீக்கிரத்தில் மறைந்துவிடும் என்று நான் திடமாய் நம்புகிறேன்.

### 5. மிஸ்ட்டர் ஜார்ஜ் பெர்னட் ஷா.

நான் பிறந்தபொழுது இங்நாகரீக உலகில் சைனு கீழ்த்தரமான நிலைமையிலிருந்தது. நான் இப்பொழுது வயதானவனுகிவிட்டேன். இப்பொழுது சைனு பெரிய தேசமாக ஆகிக் கொண்டுவருகிறது. என் நம்பிக்கை வீண் போகாதென்று நினைக்கிறேன்.

### 6. மிஸ்ட்டர் லாயட் ஜார்ஜ்.

பெரிய தேசங்களால் கொள்ளையடிக்கப்படும் இந்த உலக யுத்தம் முதன் முதலில் ஜப்பானியரால் சைனுவில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் கொடுமைகளை சீன மக்கள் எதிர்த்து நிற்கின்றனர். அதுபோல உலக யுத்தக் கொடுமைகள் ஆரம்பமான சீனுவிலேயே இந்தக் கொடுமைகள் முடியும் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கை நிறைவேற கடவுள் உதவி புரிவாராக.

# யுத்தத்தைப்பற்றி யுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்று சொல்லும் ஒரு பெரியாரின் அபிப்பிராயம்.

(சின்சினுட்டியில் செனேடர் டாட்டின் பிரசங்கம்).

நமது தேசமும், தேசமக்களும் சமாதான முறையில் நிரந்தரமாக ஜீவனம் செய்வதற்கும் அமெரிக்கக் குடியரசு தன்னுடைய க்ஷேமத்தை இஷ்டப்படி அமைத்துக்கொள்வதற்கும்தான் அமெரிக்கா யுத்தத்தில் புகுந்துவிட்டது. உலகம் பூராவிலும் ஸ்வதந்திரத்தை நிலைநாட்ட நாம் யுத்தத்தில் ஈடுபடவில்லை. நம்முடைய ஸ்வதந்திரத்தை பாதிக்காமலிருப்பதற்காகத்தான் உலக ஸ்வதந்திரம் வேண்டுமென்று நினைக்கிறோம். ஜப்பானியர்கள் சைனாவைத் தாக்கியபொழுது நாம் தலையிடவில்லை. ஜெர்மனி, போலந்தையும், ஸெகோஸ்லாவோகியாவையும் தாக்கியபொழுதும் நாம் யுத்தத்தில் ஈடுபடவில்லை. அக்கிரம யுத்தமானது அபாயகரமானதென்றும் நம்முடைய க்ஷேமத்தை பாதிக்கக்கூடிய வகையில் வெற்றிபெற்று வருகிறதென்றும் நாம் அறிந்த பிறகுதான் யுத்தத்தில் தலையிட்டோம். முதலில் பிரிட்டனுக்கு உதவியனுப்பினோம். பிறகு யுத்தத்தில் இறங்கினோம். யுத்தத்துக்குப்போகக்கூடாதென்று நான் மன்றாடினேன். ஏனென்றால் ஐரோப்பியச் சண்டையானது, அமெரிக்காவைத் தாக்கும் முறைக்கு வந்தாலும் நம்முடைய க்ஷேமத்துக்கு ஹானியளிக்கக்கூடிய வரையில் அபாயகரமாகயிருக்காதென்று நான் நம்பியிருந்தேன். நாம் யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்று பொதுஜன அபிப்பிராயம் தோன்றியதின் வரிசைக் கிரமத்தை நாம் ஆராய்ச்சி செய்தால், என்னுடைய அபிப்பிராயத்தை பொதுமக்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றே பொருள்படுகிறது. ஒருக்கால் அது சரியான அபிப்பிராயமாகயிருக்கக்கூடும். ஜப்பான் ஹவாய்த்தீவைத் தாக்கியபொழுது யுத்தத்தில் ஈடுபடுவதைவிட வேறு மார்க்கமில்லை. யுத்தத்தில் கலந்து கொண்டபிறகு, நம்முடைய க்ஷேமத்தை உத்தேசித்தும், எக்காலத்திலும் அக்கிரமமான யுத்தம் தலைகாட்டாமலிருப்பதற்காகவும் எதிரிகளுக்குக் கடுமையான சிக்ஷை விதிப்பதற்காகவும், முடிவான யுத்தம் நடத்துவதாக அமெரிக்கர்கள் தீர்மானித்துவிட்டார்கள். இதை விள, வருங்காலத்தில் அக்கிரமமான யுத்தம் நடைபெருமல் தடுக்கவும், உலகம் பூராவிலும் சமாதானம் ஏற்பட்டு அதன் மூலம் நமது நாட்டிற்கும் சமாதானம் உண்டாக்கக்கூடிய ஒரு உலகஸ்தாபனத்தை மறுபடியும் அமைப்பதாகவும் அவர்கள் தீர்மானித்திருக்கிருர்கள்.

### ராணுவத் தேவைகள் முதல் லக்ஷியம்.

நாம் யுத்தத்துக்குச் சென்ற காரணங்களின் ஆராய்ச்சி முடிவு சரியென்று ஒப்புக்கொண்டால், யுத்த சமயத்தில் நாம் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்று யோசனை செய்வோம். யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு எவ்வித தியாகத்தையும் நாம் செய்யத் தயாராகயிருக்கவேண்டும். அக்கிரமக்காரர்களைச் சிக்ஷைக்குள்ளாக்கவும் வருங்கால திட்டங்களுக்கும் தியாகம்தான் அவசியம். ஆபிரிக்காவிலும் ஸ்பெயினிலும் நாம் செய்துவரும் நடவடிக்கைகளைப்பற்றி குறைகூறுபவர்களின் மனப்பான்மையை நான் ஆதரிக்கவில்லை. டாகார் துறைமுகத்தைப் பிடிப்பதற்கு 50,000 பேர்களின் காவும் அநேக மாதங்கள் பரிச்ரமமும் தேவையென்று யுத்த இலாகாவில் மதிப்புப்போட்டார்கள். டார்லானின் ராஜீயக் கொள்கைகள் நமக்குத் திருப்தியானதோ, யில்லாததோ, அவனுடன் பேரம் செய்வது உத்தமம் என்று நாம் நினைத்தோம். ஜெர்மனிக்கு ஸ்பெயின் தேசம் சாமான்களை அனுப்புவதைத் தடுப்பதற்காக நாம் அதற்கு ஏராளமான காஸலீன் ஸப்ளை செய்து அதனிடமிருந்து குரோம்தோலும் மற்ற தாவரப்பொருள்களும் நாம் பெற்று வருகிறோம். ஜெனரல் பிராங்கோ பாஸிஸ்டாக இருந்தாலும் சரி, பொது உடமைக்கக்ஷியில் சேர்ந்தவராகிலும் சரி, நம்முடைய யுத்த முயற்சிகளுக்கு அவன் உதவி செய்கிறானென்பதுதான் நமது பேரத்தின் பயன். இதாலியுடன் தனிப்பட்ட முறையில் சமாதானம் செய்வதின் மூலம் ஜெர்மனியையும், இதாலியையும் துண்டாடிவிட நாம் ஒலிபரப்பில் பிரசாரம் செய்வதை ஆக்ஷேபிக்கும் ருஷ்யாவைச் சேர்ந்த ஒரு சாரார் இங்குயிருக்கிருர்கள். நியாயமான நிபந்தனைகளுடன் இதாலியை யுத்தத்திலிருந்து அப்புறப்படுத்தக்கூடுமானல் அதை நாம் உடன் காலத்திலேயே செய்துவிடலாம். இதாலியும் அதன் கோமாளியுமான முஸோலினியும் எப்பொழுதும் நமக்கு அபாயம் விளைவிக்கக்கூடியவர்களில்லை. அவர்களுக்கு இப்பொழுதும் வருங்காலத்துக்கும் நல்ல சூடு கிடைத்து விட்டது. ஆகையால் இதாலியுடன் சமாதானம் செய்து கொண்டால் ஜெர்மனியுடன் நடைபெறும் யுத்தம் ஒருவருஷம் குறைவுபட்டு முடிவடையக் கூடும். 5,00,000 மனிதர்களையும் நாம் காப்பாற்றிவிடலாம். நிச்சயமாக ராஜீய நோக்கங்களைவிட ராணுவ அவசியங்கள்தான் முக்கியமானவை. இந்தியா விஷயமாய் பிரிடிஷார் செய்துவரும் நடவடிக்கைகளில் நாம் குறுக்கிடவேண்டுமென்று சிலர் வற்புறுத்துகிருர்கள். இது வியசனிக்கத்தக்கது. பிரிடிஷாரின் நடத்தை சரியோ, தப்போ நாம் சொல்லமுடியாது. முதல் மூதலாக, இந்தியா பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்டது. பரஸ்பர விரோதமும் ஒற்றுமைக் குறைவும் ஏற்படும்படியாக நாம் தலையிடமுடியாது. இரண்டாவதாக இந்தியாவில் அநேக

நூற்றாண்டுகளாக அவர்கள் ராஜ்யபாரம் வகித்திருக்கிறார்கள். அமெரிக்கக் கட்டுக்கதை எழுதுபவரையும் அமெரிக்க, ஆசிரியர்களையும்விட இந்திய நிலைமையைச் சமாளிக்கும் விஷயத்தில் பிரிடனுக்கு அனுபவமுண்டு. ஜப்பானியர்கள் இந்தியாவுக்குள் புகுந்துவிடாமல் தடுப்பதும் சைனா யுத்தத்துக்கும் பர்மாவைத் தாக்குவதற்கும் இந்தியாவைச் சிறந்த யுத்த தளமாக அமைப்பதும்தான் முக்கியமான காரியமாகும்.

### மத சம்பந்தமான யுத்தமா?

ருஷ்ய நிர்வாகமானது பொதுவுடமைக் கொள்கையுள்ள யதேச்சாதிகாரிக்குட்பட்டதென்று மதித்து ருஷ்யாவுக்கு உதவி அனுப்பத்தயங்குகிறவர்களையும் நான் கண்டனம் செய்கிறேன். உலகத்திலுள்ள மற்றெல்லா சேனைகளையும்விட செம்படைதான் ஜெர்மனியை முறியடிப்பதற்குப் பேருதவி செய்திருக்கிறது. இந்த உதவிக்கு நாம் ருஷ்யாவுக்கு எக்காலத்திலும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆபிரிக்காவிலும், ஸ்பெயினிலும், இந்தியாவிலும் நமது நடவடிக்கைகளைப் பற்றிக் குறை கூறுகிறவர்களின் புகார் யாதெனில், யுத்தத்தில் வெற்றிபெறவேண்டுமென்ற அக்கரையுடன் உலகம் பூராவிலும் நமது கொள்கைகளைப் பரவச் செய்யவேண்டுமென்ற சிலுவை யுத்தத்திலும் அட்லாண்டிக் கடல் சாஸனத்தின் கொள்கைகளை பரவச் செய்வதிலும், நமது சேனைகள் முன்னேறும்பொழுது உலகத்திலுள்ள ஒவ்வொரு கண்டத்திலும், தீவிலும் நான்கு ஸ்வதந்திரங்கள் வரையப்பட்ட கொடிகளை எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்றும் நாம் ஆசைப்படுகிறோமென்பதும்தான். எந்த யுத்தத்தையும் சிலுவை யுத்தம் என்று சொல்லுவது பொருத்தமாகாது. நாம் யுத்தத்தில் வெற்றிபெற்றால், நாம் பாடுபட்டு யுத்தம் செய்த லக்ஷியங்களும் ஸ்வதந்திரங்களும் வலுவடையும். நம்முடைய நடத்தையினாலேயே ஸ்வதந்திர மக்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்றும் அறிவூட்டலாம். ஆகிலும் உலகம் பூராவிலும் ஸ்வதந்திர நோக்கங்களை பரவச் செய்வதற்காக நாம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோமென்று ஒப்புக்கொண்டால், இதேமாதிரியாக ருஷ்யாவும் அதனுடைய பொதுவுடமைக் கொள்கையை உலகம் பூராவிலும் பரவச்செய்ய சிலுவை யுத்தம் நடத்த நியாயமிருக்கிறது. ஏனென்றால் உலக பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பொதுவுடமைக் கொள்கைதான் முடிவான மருந்து என்று ருஷ்யர்கள் மதிக்கிறார்கள். எவ்வளவு கனவு கண்டபோதிலும் ஹிட்லரும் தன்னுடைய தேசீய ஜன சமூகக் கொள்கையை உலகத்தில் பரவச்செய்ய சிலுவை யுத்தம் செய்ய உரிமையுள்ளவனென்றும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சிலுவை யுத்தமென்பது ஸ்வபாவத்திலேயே அக்கிரமமான காரியம். அக்கிரம யுத்தம் செய்கிறவர்களை சிக்ஷிப்பதும், அதைத்தடுப்பதும்தான் இந்த யுத்தத்தில் நமது நோக்கங்கள். சிலுவை யுத்தம் வெற்றிகரமாக முடிவு பெற்றாலும், வெற்றி லாபத்தைவிட அதன் பயங்கரமான கொடுமைகளும், ஏராளமான தியாகங்களும், யுத்தத்தினால் ஏற்பட்ட நாசமும் அதிகமாயிருக்கும். யுத்தமென்பது சிலுவை யுத்தம் என்று ஒப்புக்கொண்டால் உலகத்தில் எக்காலத்திலும் யுத்தம்தான் நடைபெற்றுவரும். ஆகையால் இந்த யுத்தத்தை சிலுவை யுத்தம் என்று சொல்லுவது இந்த யுத்தத்தில் நாம் பாடுபடும் நோக்கங்களுக்கு முரண்பாடானது, பொருத்தமில்லாதது.

நான்கு ஸ்வதந்திரங்கள் யாவை. பேச்சுரிமையும், மத உரிமையும், தனிப்பட்ட ஜனங்கள் வசித்துவரும் தேசத்தின் உள்நாட்டு நிர்வாக முறையை பொருத்ததாகும். நிர்ப்பயமாக வசிக்கும் உரிமையும், கஷ்டமில்லாமல் ஜீவனம் செய்வதும், எந்த தேசத்திலுள்ள மக்களும் அடையவேண்டிய உரிமைகளென்றும் கருதப்படுகின்றன. ஆனால் இவ்விரண்டு உரிமைகளும் ஸர்வதேசங்களும் அடையவேண்டிய லக்ஷியங்களென்று நான் நினைக்கிறேன். இந்த நான்கு ஸ்வதந்திரங்களும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் உண்டென்று நாம் கருதினால், இந்த லக்ஷியங்களை அடைவதற்கு நிரந்தரமாக சாகும்வரையில் யுத்தம் செய்ய வேண்டியதுதான். நமது எதிரிகளை முறியடிப்பதுடன் அந்த நாடுகளில் அமெரிக்க அரசாங்கத்தை ஒட்டி நிர்வாகத்தை அமைக்கவேண்டும். நமது நேசதேசங்களின் அரசாங்கங்களையும் திருத்தி அமைக்கவேண்டும். இந்த யுத்தமானது ஜனநாயகத்துக்கும் யதேச்சாதிகாரத்துக்கும் நடைபெறவில்லை. ருஷ்யாவில் மத உரிமையும் பேச்சுரிமையும் கிடையாது. ப்ரஸீலிலும், குபாவிலும், சைனாவிலும் தாராள மனப்பான்மையுள்ள சர்வாதிகாரிகள் ஆண்டுவருகிறார்கள். போலந்திலும் ஒரு யதேச்சாதிகாரிதான் நிர்வாகம் வகித்தார். இந்த யுத்தத்தில் நாம் நேர்முகமாகக், கண்டதும் முஸோலினியை தீரமாக எதிர்த்துநின்று யுத்தம் செய்ததுமான கிரீஸ் தேசம் மெடாக்ஸாஸ் என்னும் சர்வாதிகாரியின் அமுலுக்குட்பட்டுத்தானிருந்தது. மெடாக்ஸாஸ் என்பவர் ப்ளேடோ எழுதின குடியரசு என்னும் புஸ்தகத்தைப் படிக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தான்.

### வறுமையில்லா ஜீவனம்.

ருஷ்யா, சைனா, இதர தேசங்களிலுள்ள நிர்வாகத்தில் தலையிட்டு அவைகள் ஜனங்களுக்குப் பேச்சுரிமையையும் மத உரிமையையும் அளிக்கவேண்டுமென்று நாம் கட்டாயப்

படுத்தப்போவதில்லை. அவ்விதம் செய்வதற்கு நம்மிடம் 11 மிலியன் துருப்புகளிருக்க வேண்டும். நமது நாட்டில் ஸ்வதந்திரமேயில்லாமலிருக்கும் நிலைமையை நாம் அடைய வேண்டும். அயல்நாட்டின் உள்நாட்டு வியவகாரங்களில் மற்றொருநாடு தலையிடுவதென்பது சாத்யமான காரியமில்லை.

வறுமையின்மை, உரிமையைப்பற்றிப் பேசும்பொழுது உலகத்திலுள்ள மக்களுக்கு இது சம்பந்தமாக வாக்குறுதி செய்வது முடியாத காரியம். நான் சமீபகாலத்தில் போர்டோரிகோவிற்குச் சென்றிருந்தேன். இங்கு அமெரிக்கர்கள் 45 வருஷங்களாக ஆக்ஷிபுரிந்த பின்னர் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பரிதாபகரமான நிலைமையிலிருப்பதைக் கண்ணுற்றேன். புதிய முறைகளின்படி 1935-ம் வருஷத்திலும், 1936-ம் வருஷத்திலும் போர்டோரிகோ சீர்திருத்த அரசாங்கம் அந்த தேசத்தைத் திருத்தியமைப்பதிலும் நிரந்தரமாக வறுமைப்பிணியை அகற்றுவதிலும் 100 மிலியன் டாலர்கள் செலவிட்டது. இவ்வளவு செலவிட்டும் 1932-ம் வருஷம் முதல் 200 மிலியன் டாலர்கள் அழிந்தும், சுற்றுப்பிரயாணம் செய்கிறவருக்கு அங்கே ஒரு மாறுதல்களும் புலப்படவில்லை. சில இடங்களில் மட்டும் பொதுஜனங்களுக்கு உபயோகமுள்ள சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகள் ஏழை மக்களுக்கு ஒரு பிரயோஜனமும் அளித்துவிடாது. போர்டோரிகோவில் 2 மிலியன் ஜனங்களிருக்கிறார்கள். இந்தத் தீவில் ஜனங்கள் எல்லோரும் சாதாரணமாக சுகமான வாழ்க்கையை நடத்தமுடியாது. போர்டோரிகோவிலுள்ள வறுமைக் கொடுமையைத் தீர்க்கமுடியாத நாம் எவ்வாறு ஐஸ்வர்ய இருப்புக்கு இரட்டிப்புமடங்குள்ள ஜனசமூகமுள்ள இந்தியாவையும், சைனாவையும் சீர்திருத்தம் செய்யப்போகிறோம். உண்மையாக, அமெரிக்காவிலுள்ள வறுமைப்பிணியை நாம் இதுவரையில் அகற்றவில்லை. ஆகையால் ஏழ்மைத்தனத்தையும் வேலையில்லாக் கொடுமையையும் நிவர்த்திக்கும் விஷயத்தில் அமெரிக்கா முன்னேற்றமடைந்துவிட்டதென்று நாம் எவ்விதம் சொல்லக்கூடும். பிறர்களுக்கு அமிருதபானம் செய்துவைக்குமுன் அமெரிக்காவிலுள்ள நம்முடைய பிரச்னைகளை நாம் முதலில் தீர்த்துக்கொள்ள முயலவேண்டும்.

---

## ஐரோப்பியக் கடற்கரை, உள்நாட்டு அரண்கள்.

(டைம்ஸ் பத்திரிகை, மே *12, 1943*).

---

### படையெடுப்பு ஏற்பாட்டில் கடற்படை, விமானப்படையின் ஆதிக்கம்.

வடக்கு முனையிலிருந்து ஈஜீயன் கடல் வரையிலும், எதிரி அட்லாண்டிக், மத்தியதரைக் கடற்கரைகளில் அரண்கள் அமைத்துவருகிறான். இதில் ஒரு ஆச்சரியமுமில்லை. டோவர் ஜலசந்திக்குச் சமீபத்தில் பிரான்ஸ் கடற்கரையில் அரண் அமைக்கும் வேலையை ஜெர்மனி பிரான்ஸை ஆக்கிரமித்த உடனேயே துவக்கிவிட்டது. அச்சு நாடுகளின் வலிமை குன்றிவிடவும், படையெடுப்பு ஏற்படலாமென்ற நிலைமை மாறி உடன்காலத்திலேயே ஏற்படுமென்ற நிலைமை ஏற்பட்டு, தற்காப்பு அத்யாவசியம் என்று தோன்றினவுடனும், அரண்களையமைக்கும் வேலை துரிதப்படுத்தப்பட்டது. வலுவான தற்காப்பு அரண்கள் ஹாலந்திலும், பெல்ஜியத்திலும், பிரான்ஸிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரான்ஸில் பிரிட்டனிலிருந்து புறப்பட்டு தாக்குதல் செய்யக்கூடிய ஒருவர் ஏறிச் செல்லும் சண்டை விமானத்தின் வட்டாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் பலமான தற்காப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஸிஸிலியின் தற்காப்புகள் கலே ஜலசந்தியிலுள்ளதைப் போலிருக்கக்கூடும். முக்கியமாக சுரங்கவெடி நிரம்பிய ஸ்தலங்களும், (அதாவது சமுத்திரத்தில்) கடற்கரையில் பீரங்கிகளும், லேசானதும், கனமானதுமான விமானம் சுடும் பீரங்கிகளும், முள்ளுக்கம்பிகளும், டாங்கிகளுக்கு இடைஞ்சல் செய்யக்கூடிய ஏற்பாடுகளும், ரஸ்தாவை அடைக்கும் சாதனங்களும், யந்திர பீரங்கி வைக்கும் கோட்டைகளும், அரண்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**நன்னம்பிக்கை.**

ஜெர்மானியர்கள் தங்களுடைய தற்காப்பு அரண்களைப்பற்றி ரகசியம் கொண்டாடுவதில்லை. பத்திரிகாசிரியர்களுக்குப் பகிரங்கமாக அவைகளைப்பற்றிய தகவல்களை அவர்கள் விடுக்கிறார்கள். இதன் நோக்கம் யாதெனில், யுத்தப்போக்கைக் கண்டு பிரமித்து நிற்கும் ஜெர்மானியர்களுக்கும், இதர தேசங்களுக்கும் நம்பிக்கையுண்டுபண்ணுவது ஒன்று. நேசநாடுகளுக்கும் அறிவூட்டவேண்டுமென்பது மற்றொன்று. இந்த வேலையைப் பரிஷ்காரமாகவும், சாமர்த்தியத்துடனும் அவர்கள் செய்துவிடுகிறார்களென்பதில் சந்தேகமில்லை. அநேக முக்கியமான பிரதேசங்களில் கடற்கரை அரண்கள் பலமான எதிர்ப்புக்கு லாயக்குள்ளவைகளாகயிருக்கும். ஆனால் அவைகள் பிளக்கப்பட்டால் ஜெர்மனிக்கு ஆபத்து உண்டாகிவிடும். ஆகிலும், ஐரோப்பியக் கடற்கரையின் நீளத்தை நாம் மதித்துப்பார்த்தால், ஜெர்மானியர்கள் சொல்லுகிறபடி கடற்கரை பூராவிலும் தொடர்ச்சியாக பலமான அரண்கள் அமைக்கப்

பட்டுவிட்டன என்று சொல்லுவது மிகையாகத்தோன்றுகிறது. சுலபமாகத் தாக்குதலுக்கு உட்படக்கூடிய ஸ்தலங்களில் அரண்கள் அதிக பலமாகக் கட்டப்பட்டிருக்கலாம். மற்ற இடங்களில் அவை பலஹீனமாகயிருக்கக்கூடும். பெரும்பாகத்தில் அரண்களேயிருக்கமுடியாது. இந்த பாகங்கள் பீரங்கி குண்டுவீச்சுக்குட்பட்ட ஸ்தலங்களாகயிருக்கலாம்.

கடற்கரைத் தற்காப்புகள்தான் வெளியிலிருக்கும் அரண்கள். உள் நாட்டு அரண் ஒன்றிருக்கிறது. இது பிரான்ஸையும், இதாலியையும் சேர்த்துக் கட்டப்படவில்லை. ஹங்கேரிக்கு வெளியே கட்டப்பட்டிருக்கிறது. இதன் எல்லைப்புறத்தில் மேற்குப்பக்கத்தில் ஸீக்பிரட் அரணும், ரைன் நதியும், கருங்காடும், தெற்கே ஆல்ப்ஸ் மலையும், டினாரிக் ஆல்ப்ஸும், பால்கன் காடுகளும், கார்பெதியன் மலைகளும், கிழக்கே ருஷ்யப் போர்முனைக்குப் பின் ஏராளமான கோட்டைகளுமிருக்கின்றன. இந்தக் கோஷ்டத்திற்குள் ஜெர்மனி அடைபட்டாலும் யுத்தத்தை நடத்துவதற்கு ஜெர்மனியிடம் போதுமான பலமிருக்கிறது. ஆகிலும் சுற்றுப்புறத்திலுள்ள சில ஸ்தானங்களை ஜெர்மனி பிடித்துக்கொண்டதால் மாகிஞே அரணைப் பிடிப்பதற்கு அதற்குப் பலவிதமான பலம் கிடைத்ததுபோல மேற்கு பிரான்ஸிலும், இதாலியிலும், கிரீஸிலும் அல்லது ஏதாவது இரண்டு தேசங்களில் நாம் ஊன்றிவிட்டால், உள் நாட்டு அரணுக்கு அபாயம் அதிகரித்துவிடும். அதைத் திடீர் தாக்குதல் செய்வதற்கும் நமக்கு வசதியேற்படும்.

### சிறந்த படைபலம் அவசியம்.

இயற்கையானதும், கட்டப்பட்டதுமான தற்காப்புகள் மிகவும் பலமானவைகள்தான். இவைகளின் பிரயோஜனமானது அதைப் பாதுகாக்க வைக்கப்பட்டிருக்கும் படை பலத்தின் திறமையையும் அதற்கு உதவியளிக்கும் விமான பலத்தையும் பொருத்ததாகும். குறிப்பாகச் சொன்னால் ஒவ்வொரு தற்காப்பு அரணும் ஒரு ஒளியென்று சொல்லலாம். பலமான தற்காப்பையும் வெகு சீக்கிரமாகப் பிளந்துவிடலாம். இந்தப் பிளவுகளை அடைப்பது வ்யூகரசனையைப் பொருத்திருக்கும். பலமாகத் தாக்கும் துருப்புகளை எதிர்த்து அடிக்கவும், அவனைத் துரத்தியடிக்கவும் சிறந்த துருப்புகள் வேண்டும். கடற்கரையிலுள்ள தற்காப்பிலுள்ள படைகளின் ஒத்தாசைக்கு இரட்டிப்பு மடங்குள்ள உதவிப்படையிருக்கவேண்டும். அவசியமேற்படும்பொழுது இதர பகுதிகளிலுள்ள கடற்கரைத் தற்காப்புப்படைகளையும் மற்றொரு இடத்துக்கு உபபலமாகக் கொண்டுபோகலாம். ஆகிலும், அவைகள் அரண்களிலுள்ள துருப்புகள் அநேகமாக அசைக்கமுடியாத ஆயுதமுள்ளவர்கள். அவைகளை அப்புறப்படுத்துவதிலுள்ள சிரமத்துடன், அவைகளில் சிலவற்றைத்தான் உபயோகிக்க முடியும். தற்காப்புள்ள கடற்கரையின் நீளத்தையும், தற்காப்பிலுள்ள துருப்புகளில் மூன்றிலொருவர் சலனப்படையாகவும், கேந்திர ஸ்தானங்களில் வைக்கப்பட்டுமிருக்கிறார்களென்றும் மதித்தோமானால் தற்காப்புச் செய்வது சுலபமென்று தோன்றவில்லை. கடற்கரையின் நீளத்துக்கு உபரியான துருப்புகளை வைத்துக்கொண்டிருந்தபொழுதுகூட ஜெர்மன் படையெடுப்பைத் தடுக்க நாம் செய்த முயற்சி சிரமசாத்யமாகயிருந்தது.

போர்புரியவேண்டிய துருப்புகள் சம்பந்தமாகவும், ஜெர்மனியைவிட நமக்கு அதிக சௌகரியமேற்பட்டிருந்தது. ஏனெனில் நமது துருப்புகளின் நடமாட்டம் குறுகலான பிரதேசத்துக்குள்ளாக நடைபெற்றது. ஜெர்மன் துருப்புகள் ரைன்லாந்திலிருந்து இதாலிக்குச்செல்லவேண்டும். பிரான்ஸ் பக்கத்தில் படையெடுப்பு பீதியிருக்கும்பொழுது எல்லாத் துருப்புகளையும் வேறு பக்கத்துக்கு அனுப்பமுடியாது. மேலும் யுத்த களத்திலும், இதர தளங்களிலும் இருக்கும் துருப்புகளைப்போல் ஜெர்மனியிலிருக்கும் துருப்புகள் லாகவத்துடன் வேலை செய்யுமென்றும், சிறந்த முஸ்தீப்புகள் பெற்றிருக்கின்றனவென்றும் சொல்ல முடியாது. ஆகையால் ஜெர்மனியிலிருக்கும் யுத்தம் செய்யக்கூடிய படைகளையும், அவைகளை பல இடங்களில் அமைத்துவைக்கும் சாதுர்யத்தையும் பொறுத்துத்தான் ஜெர்மன் தற்காப்பின் மேன்மை புலப்படும். ஆகையால் கேந்திர ஸ்தானங்களில் ஏமாற்றம், பாசாங்கு, போக்குவரவுகளைத் துண்டிப்பதுபோன்ற தந்திரங்களைக் கையாண்டு, குறைவான துருப்புகளை உபயோகிக்கும் முறைகளில்தான் நேசதேசங்கள் கவனம் செலுத்தவேண்டும்.

படையெடுப்புச் செய்வதற்கு முக்கியமானது கடற்படைதான். பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் துருப்புகள் இறங்குவதற்கு 2 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் தேவையாயிருந்தன. அதாவது, 4,000 டன்கள் எடைமானமுள்ள 500 கப்பல்கள் உபயோகப்படுத்தப்பட்டன. துருப்பேற்றிச் செல்லும் கப்பல்களிலும், சாமான் கப்பல்களிலும், எதிரியின் எதிர்ப்பையும் லக்ஷியம் செய்யாமல் துருப்புகள் இறங்குவதற்குத் தேவையான சகல முஸ்தீப்புகளும் வைக்கப்பட்டிருந்தன. இது மிகவும் சிக்கனக்குறைவான முறை. யுத்த தந்திர முறையில் இம்மாதிரியான சாமான்களைச் சேர்த்துவைப்பது அதிகமாகும். முஸ்தீப்புகளெல்லாம் அடக்கமான பெட்டிகளில் அடைக்கப்படவேண்டும். அநேக சாமான்கள் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்றன. அவைகளைச் சின்னாபின்னம் செய்து இட வசதியை உத்தேசித்து பெட்டிகளில் அடைத்துவிடவேண்டும். எல்லா நடவடிக்கைகளுக்

கும் அத்யாவசியமான சாமான்களும் கொண்டுபோகவேண்டும். ஆகையால் படையெடுப்புக்கு எல்லாவிதமான படைகளும் அவசியமானவை. ஆகிலும் ஐரோப்பா கண்டத்தில் படையெடுப்பதற்கு பலவகைப்பட்ட சாமான்களைக் கப்பலில் ஏற்றிச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. ஏனெனில் யுத்த அரங்கத்துக்குச் சமீபத்திலேயே நாம் ஏராளமான தளவாடங்களைச் சேமித்து வைத்திருக்கிறோம்.

ஏராளமான கப்பல்கள் நஷ்டமும் நமக்கு ஏற்படக்கூடும். சாதுர்யமாக அநேகக் கப்பல்களும் இங்குமங்கும் அநேகம் தடவை நடமாடக்கூடும். எல்லாம் இனிது நடைபெற்று உபயோகமுள்ள துறைமுகங்களுள்ள முக்கிய ஸ்தானங்கள் நமது வசமாகிவிட்டால் யுத்த அவசியமான தளவாடங்களை கப்பல்களில் ஏற்றிச் செல்லுவதற்கு வசதி உண்டாகும். சாமான் கப்பல்களுடன் செல்லும் துணைக்காவல் கப்பல்களும் அதிகமாகயிருக்கவேண்டுமென்றாலும், குறுகிய பிரதேசங்களைத் தாண்டுவதற்கு அதிக சிரமமேற்படாது.

## மூன்றாவது முக்கியமான தேவை.

விமான பலம்தான் மூன்றாவது முக்கியமான தேவை. கடலில் செல்லும்பொழுது ரக்ஷணையும், துருப்புகள் இறங்கியபின் தற்காப்பும், அதற்குப்பின் நடைபெறும் நடவடிக்கைகளில் உதவியும், துறைமுகங்களையும் போக்குவரவு மார்க்கங்களை காப்பாற்றுவதும், விமானப்படையின் அலுவல்களாகும். இந்த அனுமானத்தைக்கொண்டு துருப்புகளிறங்கும் பிரதேசங்கள் விமானப்படையின் ரக்ஷணைக்குட்பட்டதாக இருக்கவேண்டும். இந்த விஷயம் எதிரிக்கும் அறிமுகமானதுதான். இது சாத்தியமில்லாத இடங்களில் விமானம் இறங்கும் தளங்கள் ஏற்பாடாகும் வரையில், விமானம் தாங்கிச் செல்லும் கப்பல்களின் ஒத்தாசை அவசியம் வேண்டும். நேசதேசத்தாரின் லக்ஷியங்கள் சண்டை விமானங்கள் பறந்து சென்று திரும்பி தளத்துக்கு வரக்கூடிய அளவைத் தாண்டியிருந்தபோதிலும் விமானங்கள் புறப்பட்டுச் சென்று அந்த லக்ஷியமான பிரதேசத்தில் இறங்கிவிடுவதற்கு எப்பொழுதும் சௌகரியமுள்ளதாகவேயிருக்கும். ஆகையால் எதிரியைச் சேர்ந்த விமான தளம் நமது வசமானவுடனேயே நமது விமானங்கள் புறப்பட்டு அவ்விடங்களுக்குச் சென்றுவிடலாம். இந்தத் தளங்களைப் பிடிப்பதில் விமானமூலம் செல்லும் துருப்புகள் உபயோகப்படும். கடற்கரைத் தற்காப்புகளைத் தாண்டிக் குதிப்பதிலும், விமானம் செல்லும் துருப்புகள் விசேஷப் பங்கெடுத்துக்கொள்ளலாம்.

ஜெர்மனியின் சண்டை விமானபலம் மேற்கு ஐரோப்பாவிலும், மத்தியதரைக்கடலிலும் மிகவும் வலுவுள்ளது. பிரிடனில் எதிரியின் வெடி விமானங்களின் நடமாட்டம் இச்சமயத்தில் அதிகமாகயில்லையென்பதிலிருந்து எதிரியானவன் மேற்குப் பக்கத்திலுள்ள வெடி விமானப்படையை மற்ற பகுதிக்குக் கொண்டுபோயிருப்பானென்று சிலர் தப்பான அபிப்ராயம்கொண்டிருக்கிறார்கள். நாம் மேலே சொல்லிய பிரகாரம் படையெடுப்பு நேரிடும்பொழுது அவைகளை உபயோகிக்க அவன் தயாராகயிருக்கிறானென்பதில் சந்தேகமேயில்லை. வெடி விமானமூலம் முக்கிய ஸ்தானங்களைத் தகர்ப்பது, துறைமுகங்களை அழிப்பது, கப்பல்களை மூழ்கடிப்பது, படையெடுப்புப் படைகளின் சக்தியைக் குலைப்பது, முக்கியமாகப் படைகள் இறங்கிய பிறகு சிரமப்பரிகாரம் செய்துகொண்டிருக்கும்பொழுது அவைகளைத் தாக்குவதுபோன்ற அலுவல்களை ஜெர்மன் வெடி விமானப்படை நடத்தக்கூடும். இந்த நடவடிக்கைகளுக்குப் பரிகாரம் செய்யவேண்டுமானால், புதிய விமானத் தளங்கள் சீக்கிரமாக அமைக்கப்பட்டு விமானம் சுடும் பீரங்கிகளும் அமைக்கப்படவேண்டும். இது வெற்றிகரமாக முடிவடையவேண்டுமானால் ஜாக்கிரதையாக முன்னேற்பாடுகள் செய்தாகவேண்டும்.

## முக்கியமான அம்சங்கள்.

ஐரோப்பாவில் படையெடுப்பதற்கு அவசியமான அம்சங்களை எடுத்துரைத்திருக்கிறோம். ஒரு பிரதேசத்தைவிட மற்றொரு பிராந்தியம் இறங்குவதற்குச் சிலாக்கியமானதென்று சொல்லுவதற்கில்லை. இதை நிர்த்தாரணம் செய்வது இருதரப்பாரிடமிருக்கும் முஸ்தீப்புகளையும், அணிவகுப்பையும் பொருத்திருக்கிறது. நேசதேசங்களின் முஸ்தீப்பு பலம் அதிகம் என்று ஒப்புக்கொண்டால், படைகள் இறங்குவதற்கு வடக்கு பிரெஞ்சு தேசம்தான் சிறந்த பிரதேசம். எதிரியின் பலத்தை மதித்துப்பார்த்தால் அவனுடைய படை பலம் சிறந்தது. வியவகாரத்துக்காக ஜெர்மனியிடம் 45 டிவிஷன் துருப்புகளிருக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். ருஷ்யப் போர் முனையிலிருந்து உதவிக்காக எதிரி 15 அல்லது 20 டிவிஷன் துருப்புகளை ஜெர்மனிக்குக் கொண்டுவந்தால் நிலைமையில் விசேஷ மாறுதல்கள் ஏற்படும். ஆகையால் நேசநாடுகள் சாவதானமாக மெதுவாக முன்னேறவேண்டும். முதலில் தெற்கு இதாலியில் ஒரு கேந்திர ஸ்தானத்தைக் கைப்பற்றவேண்டும். விமான நடவடிக்கையும் இவ்விதமாகவே நடைபெறவேண்டும். இந்தக் கட்டுரையில் துலக்கியிருப்பதுபோல, இந்தப்பிரச்னைகள் சிக்கலானவையல்ல. எதிரிவசமுள்ள விசாலமான பிரதேசங்களைத் தற்காப்புச் செய்வதற்கு எதிரியிடம் போதுமான வசதியில்லை. நாளடைவில் இது அசாத்தியமென்றும் அவனுக்குப் புலப்பட்டுவிடும்.

# தன்வினை தன்னைச்சுடும்.

நேசநாட்டாரின் வெடிகுண்டு வீச்சுக்கு ஜெர்மானியங்கள் ஆக்ஷேபனை செய்வது பிரயோஜனமற்றதென்று நடுநிலைமை தேசத்தார்கள் சமீப காலத்தில் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜெர்மனியை பிரிடிஷ் விமானப்படை தாக்குவதில் அவர்களின் தீவிரமான யுத்த லக்ஷியங்களுடன், 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் லண்டனை ஜெர்மன் விமானப்படை தாக்கியபொழுது ஜெர்மானியர்கள் வெளியிட்ட குரூரமான சந்தோஷத்துடன் ஒப்பிடுகிறார்கள். அந்நாளில் ஜெர்மனி வெளியிட்ட சில வியாக்யானங்களையும் நடுநிலைமை நாடுகள் வெளியிடுகிறார்கள். அவைகளில் சிலவற்றை கூறுவோம்.

லண்டன் நகரத்தில் பெருந்தீயும் ஏராளமான புகையும் கிளம்பி அதன் அழிவைத் துரிதப் படுத்துகிறது. உலக அழிவிற்கும், இது முற்போக்கானது. இங்கிலாந்து எதிர்த்துச் சண்டை போட்டால் ஜெர்மன் விமானப்படை அங்கிருக்கும் ஒவ்வொரு கட்டடத்தையும் நொருக்கி விடும்.

இதற்குப்பின் சிலநாள் கழித்து நேர்முகமாக கண்ணுற்ற ஒரு ஜெர்மானியர் சொன்னதாவது. "நமது வெடி விமானங்கள் லண்டனிலுள்ள லக்ஷியங்களை அணுகிவரும்பொழுது கோரமான அழகான தோற்றம் புலப்படுகிறது. தோற்றத்தின் கோரத்தைக்கண்டு ஒரு வெடி விமானத்தில் செல்லுவது எவ்வளவு ருசிகரமாகயிருக்கிறதென்று நாங்கள் நினைத்தோம். 8 மிலியன் பொதுஜனங்கள் அழிக்கப்படும் தருவாயிலும் பசிப்பிணிக்கு உள்பட்டுமிருக்கிறார்கள்".

ஸெப்டம்பர் மாதம் 20-ம் தேதியன்று வோக்கிஷர் பியோபாக்டர் என்னும் பத்திரிகையில் கீழ்கண்ட தலையங்கம் அச்சிடப்பட்டிருந்தது. "லண்டனை ஜெர்மானியர்கள் உக்ரமாகத் தாக்குகிறார்கள். ஏராளமான ஆள் சேதம்". மறுநாள் பத்திரிகையில் "லண்டனில் எல்லா பாகங்களிலும் குண்டுமாரி. லண்டன் ஜனங்கள் எலிகளைப்போல் சுரங்கங்களில் வசித்து வருகிறார்கள்" என்று வெளியிடப்பட்டிருந்தது. மற்றொரு சமயம் "லண்டனில் லக்ஷம் பேருக்கு வீடில்லை, லண்டனில் மிகவும் முக்கியமான பாகங்களின் அழிவு முற்போக்கான நடவடிக்கை".

மேலே சொல்லியிருக்கும் ஒலிபரப்பு பிரசங்கங்கள், பத்திரிகை பிரசுரங்களை ஆதாரமாகக் கொண்டு நடுநிலைமை நாடுகள் பிரிடிஷ் விமானப்படையின் நடவடிக்கை சிறந்ததென்றும் இங்கிலாந்தில் ஒருவிதமான குதூகலப் பேச்சுமில்லையென்றும் அறிவிக்கின்றன. லக்ஷம் ஜனங்கள் உயிர்துறந்தபோதிலும் பிரிடிஷ் மக்கள், அச்சுநாடுகளின் யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அழிப்பதன்மூலம் எதிரியை முறியடித்துவிடுவதென்று தீர்மானம் செய்துவிட்டார்கள்.

---

## சுங்கிங்கின் ஊக்கம்.

(ஹாதார்ன் செங்க்.)

உலகத்தில் பலமான வெடி குண்டுகளுக்குட்பட்ட நகரங்களில் சுங்கிங்கும் ஒன்றென்று சொல்லப்படுகிறது. வெடி குண்டுகளுக்கு அடிக்கடி உட்பட்டிருந்தபடியால் சுங்கிங் ஜனங்கள் விமான எச்சரிக்கைகளைக்கண்டு மனம் கலங்குவதில்லை. சுங்கிங் மக்கள் வெடி குண்டுகளின் சிரமத்தையும் தவிர வேறுவகையிலும் சிரமப்பட்டார்கள். சீன டாலரின் செலாவணிக் குறைவு ஒரு பக்கமும், சாமான்களின் விலைவாசி உயர்வு மற்றொரு பக்கத்திலும் ஏற்பட்டது.

என்ன கஷ்டம் வந்தாலும், சுங்கிங் ஜனங்களின் மனம் தளர்ச்சியடையவில்லை. ரொம்பவும் அபாயமும், சிரமமும் ஏற்பட்டபோதிலும் அவர்கள் குன்றாத தைரியத்துடனும் வலுவுடனும் யுத்தம் நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு ஜெர்மன் வெடி குண்டு வீச்சுக்குப்பின் லண்டனில் "வியாபாரம் எப்பொழுதும் போல் நடைபெறுகிறது" என்று சொல்லப்பட்டது. சுங்கிங்கின் நடவடிக்கை அதைவிட ஒரு படி தாண்டிவிட்டது. இங்கு ஜனங்கள் எப்பொழுதும் போல் ஜீவனம் செய்து வருகிறார்கள்" என்று சொல்லப்படுகிறது.

### இதன் மர்மம்.

இவ்விதமாக விநோதமான நடவடிக்கை சுங்கிங்கில் நடைபெறுவதன் ரகசியம் என்ன? இதைப்பற்றி பிரிடிஷ் சுற்றுப்பிரயாணி குறிப்பாக ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார். வியப்புடன் "இங்கு எல்லோரும் குதூஹலமாக இருக்கிறார்கள்" என்று அவர் சொன்னார். சுங்கிங்கிலுள்ள ஜனங்களின் மனப்பான்மையை வர்ணிப்பதற்கு "சிரிக்கிறார்கள்" என்ற பதப்பிரயோகம் பொருத்தமானதுதான். அவர்கள் கஷ்டங்களை முகமலர்ச்சியுடன் அனுபவித்து வருகிறார்கள். தவிர்க்கமுடியாத விஷயத்தில் அவர்கள் ஒத்துழைக்கும் முறைகளைக் கற்றுவிட்டார்கள். ஒத்துழைப்பதென்றால் சமாதானம் செய்துகொள்ளுவதென்று பொருள்

படாது. இந்த மனப்பான்மையுடன் அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். தைரியமாக இருக்கிறார்கள். இறுதியில் இடையூறுகளை பாய்ச்சல் சாதனங்களாகவும் உபயோகப் படுத்துகிறார்கள்.

இந்த சிறந்த குணத்தைத்தான் சுங்கிங்கின் மனோ தைரியமென்று சொல்லுகிறோம். ஏனென்றால் ஸ்வதந்திர சைனாவின் மனோ தைரியத்துக்குச் சுங்கிங்தான் சிலாரூபமான அமைப்பு. தொன்று தொட்டு சுங்கிங்கிலுள்ளவர்கள் இந்த மனப்பான்மையைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இந்த ஊக்கத்தினால்தான் சீன தேசமும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நிலைபெற்று வந்திருக்கிறது.

## உணர்ச்சி பலம்.

கிறிஸ்துக்கு முன் 1027-771-ம் வருஷங்களான மேற்கு சௌ யுகத்தில் சுங்கிங் பா ஸமஸ்தானத்தின் தலைநகரமாகயிருந்தது. ஒரு சமயம் பா ஸமஸ்தானத்தை சமீபத்திலுள்ள மற்றொரு தேசம் முற்றுகை போட்டது. ஜெனரல் பா என்பவர் மற்றொரு ஸமஸ்தானத் தலைவரின் உதவியை நாடினார். பா ஸமஸ்தானத்தின் மூன்று நகரங்களை வெகுமதியாகக் கொடுத்தால் உதவியளிப்பதாக அவர் ஒப்புக்கொண்டார். முற்றுகை அகற்றப்பட்டபொழுது மூன்று நகரங்களையும் கொடுத்துவிடும்படி வேண்டப்பட்டது. ஜெனரல் பா தன்னுடைய சிநேகிதனிடம் சொன்னதாவது. "நான் உனக்கு மூன்று நகரங்களை தானம் செய்தால் என்னுடைய தேசத்துரோகியாவேன். கொடுக்க மறுத்தால் நான் செய்த வாக்குறுதியை நிறைவேற்றாதவனாகிவிடுவேன். ஆகையால் நான் உயிர் துறப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று சொல்லி உறைவாளை எடுத்துக்கொண்டு தன்னுயிரை அவர் மாய்த்துக்கொண்டார்.

இறப்பதே ஒழிய பணிவது கிடையாது என்னும் மனப்பான்மைதான் சீனாவில் இன்னும் ததும்புகிறது. "7 நக்ஷத்திர" மேடையிலிருக்கும் ஜெனரல் பாவின் புதை குழியானது இன்றைக்கும் சுங்கிங் சரித்திரத்தில் ஒரு முக்கிய குறிப்பான அடையாளமாகயிருக்கிறது. இது ஒரு எல்லைக்கல் மட்டுமல்ல. இதே உணர்ச்சி பலத்துடன்தான் சைனாவின் மர்மஸ்தானம் போன்ற சுங்கிங் தற்போதைய அபாயகரமான நிலைமையை சமாளித்து வருகிறது.

## சகிப்புத் தன்மை.

இவ்விதமாகத்தான் சுங்கிங் தன்னுடைய கஷ்டங்களைத்தாண்டி வருகிறது. 1939, 1940, 1941-ம் வருஷங்களில் கடுமையான வெடிகுண்டு வீச்சேற்பட்டபொழுது சுங்கிங்கு சமாளித்து அபிவிருத்தியடைந்ததற்கு, துரத்தியடிக்கும் விமானங்களும், சண்டை விமானங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் உதவவில்லை. சகிப்புத் தன்மையும், விடாமுயற்சியும் குதூகலமாகயிருக்கவேண்டுமென்ற உணர்ச்சியும்தான் ஜனங்களின் க்ஷேமத்திற்குக் காரணங்கள். வெடிகுண்டு வீச்சுக்குட்பட்டு பழுதுபட்ட பழையவீடு, கடை, தொழிற்சாலை, பள்ளிக்கூடம், ஸர்க்கார் காரியாலயம், இவைகளுக்குப் பதிலாக வெகு சீக்கிரமாக ஒரு புதிய கட்டடம் நிர்மாணம் செய்யப்பட்டது.

சில சமயத்தில் செங்கல் சுண்ணாம்புக்குப் பதிலாக பிராசீனமான மூங்கில்களும், மண்ணும் உபயோகப்படுத்தப்பட்டன. வேலை நடப்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். விமானத் தாக்குதல்கள் ஏற்படும்பொழுது ஆபீஸ் வேலைகளும், தொழிற்சாலைகளும், பள்ளிக்கூடப் படிப்பும் ஒளிகளில் நடைபெற்றன. இந்தச் சங்கடத்திலும் ஜனங்கள் கல்யாணம் செய்துகொண்டார்கள். சந்ததிகளும் அபிவிருத்தியடைந்தன. கல்யாணங்கள் மத ஆசாரத்துடனும் நடைபெற்றன. நகரம் இருளில் மூழ்கியிருந்தபொழுது ஒளிகளில், பிரசவங்களும் நடைபெற்றன.

## ஜீவனச் செலவு.

சுங்கிங்கில் ஜீவனச் செலவு அபரிமிதமாக அதிகரித்துவிட்டது. இதிலிருந்து விளைந்த சிரமங்கள் முன்னிருந்ததைவிட சிரமமான நிலைமையைக் குறிப்பிடுகிறதே ஒழிய நிலைமை மோசமாகிவிடவில்லை. ஆடைகள், ஆகார வசதிகள், குடியிருப்பு வசதி, பிரயாண வசதிகளின் செலவுகள் அதம பக்ஷத்துக்குக் குறைந்துவிட்டன.

சைனாவில் பணக்காரர்கள் அதிகமில்லை. பணக்காரரும் நிரந்தரமாக தனவானாகயிருக்க முடியாது. ஆகையால் பெரும்பான்மையான ஜனங்கள் சிக்கன முறையிலும், செட்டாகவும் ஜீவனம் செய்து வருகிறார்கள். யுத்த காலத்தில் இந்த முறைகளைச் சமாதான காலத்தைவிட கடுமையாக அனுஷ்டிக்கவேண்டும்.

கிழிந்துபோன பழைய வஸ்திரங்கள் ஒட்டுப்போட்டு அணிந்துகொள்ளப்படுகிறது. கசாய் ஆபூர்வமாகத்தான் உட்கொள்ளப்படுகிறது. நவீன முறைகளில் அமைக்கப்படும் கட்டடங்களுக்குப் பதிலாக மண்குடிசைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. பிரயாணத்துக்கு வண்டிகளுக்குப் பதிலாக மனிதர்கள் நடந்து செல்லுகிறார்கள். ஆகையால் சுங்கிங்கிலுள்ளவர்கள் அத்தியாவசிமான சாமான்களைத்தான் விலைக்கு வாங்குகிறார்கள். சீனர்கள் சிக்கன முறையில் பதில்வெட்டு சாமான்களையே உபயோகித்து வருகிறார்கள்.

## அதிகச் சிக்கனமான ஜீவனம்.

சைனாவின் தலைநகரமான சுங்கிங்கிலுள்ளவர்கள் சந்தோஷமாக கஷ்டங்களைச் சமாளித்து வரும் மனப்பான்மையானது சகலவிதமான தொழிற் ஸ்தாபனங்களிலும் காணப்படுகிறது. முக்கியமாகக் கஷ்டப்படுகிறவர்கள் பொதுஜன அதிகாரிகள் தான். ஊதியம் பெற்றுவருபவர்களில் இவர்கள் தான் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள். ஊதியமும், அரிசிக்காக உபரிச் சம்பளமும், யுத்த அல்லவன்ஸும் எல்லாம் சேர்ந்து அவர்களின் அதம பக்ஷமான தேவைகளுக்குக்கூட சரிக்கட்டமுடியவில்லை. இந்தச் சிரமத்தை நிவர்த்திக்க அதிகச் சிக்கனமான முறையில் வசிப்பது தான் நல்ல முறையாகும்.

மாணவர்களும் கஷ்டப்படுகிறார்கள். கடற்கரை மாகாணங்களிலிருந்து சுங்கிங்கில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் சேனைகள் போல நெருக்கடியான இடங்களில் வசித்து வருகிறார்கள். இவர்கள் பாய்கள் மேய்ந்த கொட்டகைகளில், கப்பலிலுள்ள மெத்தையடுக்குப்போல் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும் படுக்கைகளில் தூங்குகிறார்கள். இவர்களுக்கு அளிக்கப்படும் தினசரி உணவு 99·9 சதவிகிதம் மரக்கறி தான். பிராசீனத்தில் ஏழை மாணவர்கள் சூரிய வெளிச்சத்திலும் சந்திரகாந்தியிலும் படிக்கும் முறைகள் மறுபடியும் துவக்கப்பட்டுவிட்டன. சைனாவில் மாணவர்கள் எண்ணெய் விளக்குகளை வைத்துக்கொண்டு படிப்பது என்பது சிரமமானது.

## யுத்த கால வியாபாரங்கள்.

சில அம்சங்களில் யுத்த நிலைமையானது எல்லோரையும் பக்ஷபாதமில்லாமல் பாதிக்கவில்லை. யுத்த காலத்தில் வியாபாரிகள் தான் அனுகூலமடைந்த வகுப்பினராவார். சாமான்களின் விலைவாசிகளின் உயர்வு ஏற்பட்டுவிட்டதால் வியாபாரிகளுக்கு லாபம் ஆயிரக்கணக்கில் கிடைத்துவிடுகிறது. அதிகமாகச் சேமித்து வைக்கிறவர்களும் உபரி லாபம் சம்பாதிக்கிறவர்களும் வெகு சீக்கிரத்தில் மிலியன்கள்கணக்கான பொருள் சம்பாதித்து விடுகிறார்கள். இம்மாதிரி கொள்ளையடிப்பதில் ஒருவனுடைய உயிருக்கும் ஹானியேற்படக்கூடும். சட்ட விரோதமானதென்பது ஒரு புறமிருக்க இம்மாதிரியான கெட்ட முறைகளை பொதுஜன அபிப்பிராயம் கண்டிக்கத் துணிந்துவிடும்.

பொதுவாக வியாபாரிகள் தான் தேச முன்னேற்றத்துக்கு வழிபட வேண்டும். சுங்கிங்கில் அவர்கள் அபாயத்துக்குட்பட்டு வியாபாரம் செய்து வருகிறார்கள். ஒரே இரவில் ஷாப்பிலுள்ள சாமான்களுள்பட கடைகள் தரை மட்டமாகிவிடும். ஒரு பெரிய முதலாளி ஒரே இரவில் திவாலாகிவிடுவான். ஆகிலும் வியாபாரியின்சோர்வடையாத மனோ தைரியம் மட்டும் வெடிகுண்டுகளால் அழிவுபடாது. ஆகையால் சுங்கிங்கில் வியாபாரம் நடந்துவருகிறது. நாணயப்பெருக்கும் உண்டாகிறது.

## மலைப் பிராந்தியமுள்ள நகரம்.

மலைக் குன்றுகளின் ஓரத்தில் கட்டப்பட்டிருக்கும் சுங்கிங்கு மலைப் பிராந்திய நகரம் என்று சொல்லப்படுகிறது. அதற்குப் போகும் மார்க்கங்களும், வீதிகளும் கருங்கல் படிக்கட்டுகள் உள்ளவை. ஆகையால் டோலிகளில் செல்வது அத்யாவசியமாகும். இவைகளின் உதவியில்லாமல் சுங்கிங் தெருக்களில் நடமாடுவது கஷ்டசாத்தியமானது. பலஹீனமுள்ளவர்களும் விருத்தர்களும் சுலபமாக நடமாட முடியாது. அநேக வாலிபர்கள் நடந்து செல்லுகிறார்கள். சிலர்கள் டோலியில் செல்லத்தான் பிரியப்படுகிறார்கள். அரசாங்கத்தைச் சேர்ந்த உயர்தர உத்தியோகஸ்தர்கள் சொந்த டோலியில் வீட்டிலிருந்து கச்சேரிக்குச் சென்று திரும்பி வருகிறார்கள்.

சுங்கிங்கில், டோலியைச் சுமக்கும் ஒருவனுடைய அபிப்பிராயத்தை நாம் மதித்துப் பார்த்தால் யுத்தத்தின் காரணமாக அரசாங்கமும், அதன் அங்கமும், தொழிற்சாலைகளும், கல்வி ஸ்தாபனங்களும் மேற்குப் பக்கத்துக்குச் சென்றுவிட்டதிலிருந்து ஷெச்வான் தொழிலாளர்களுக்கு அதிக லாபம் கிடைத்திருக்கிறதாம். யுத்தத்துக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது வியாபாரம் நல்ல முறையில் நடைபெறுகிறதென்று வியூகான் என்பவர் வெளியிட்டார். லியும் அவருடைய கூட்டாளியும் ஒரு நாளைக்கு 100 டாலர்கள் சம்பாதிக்கிறார்கள்.

ஒருவர் தன்னுடைய பாதி ஊதியத்திலிருந்து டோலிகள் வைக்கும் இடத்திற்கு .6 டாலர் வாடகை கொடுக்கிறார். ஒரு சிற்றுண்டி சாலையில் ஒரு வேளை போஜனத்துக்கு 10 டாலர் செலவழிக்கிறார். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு உபயோகப்படக்கூடிய ஒரு ஜோடி ஜோடுகள் 4 டாலர் விலையாகுகிறது. டோலியில் போவதற்கு ஒரு மைலின் மூன்றில் ஒரு பங்குக்கு 2 டாலர் வரி கொடுக்கவேண்டும்.

இவ்விதமாக சுங்கிங்கிலுள்ள பலவகைப்பட்ட தொழில் முறையுள்ளவர்கள் சுங்கிங்கில் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். பிரளய காலம்போல் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சுங்கிங்கின் ஜனங்கள் இதைவிட வசதிக்குச் சௌகரியமான இடமில்லையென்று நினைக்கிறார்கள்.

# வேவலின் கடற்படை.

அரக்கான் போரில் கடற்படையின் பெயர்தான் விசேஷமாக பிரஸ்தாபிக்கப்படுகிறது. கடற்படை யென்பது பிரிடிஷ் கடற்படை, இந்திய கடற்படை, பர்மா கடற்படை, சேனையின் உத்யோகஸ்தர்கள் நடத்திச்செல்லுவதும் வேவலின் கடற்படையென்று சொல்லப்படும் நதிகளில் போகும் சாமான்கள், பிரயாணிகள் ஏறிச்செல்லும் சிறிய படகுகளும் சேர்ந்தது.

மேலே சொன்ன பலவகைப்பட்ட கப்பல்கள், கடற்கரை யோரமாக ஆக்யாபுக்கும் அதற்கப்புறம் உள்ள பிரதேசத்திலும், நாப், மாயூ போன்ற வேகமுள்ள நதிகளிலும் தீர மான நடவடிக்கைகளைச் செய்திருக்கின்றன. இந்திய சேனை அப்ஸர்வர் சொல்லுகிறபடி சென்ற மாரிகாலத்தில் ஜப்பானியர்களைத் தாக்கும் போரில் கடற்படையின் நிகழ்ச்சிகள் மிகவும் ஸ்வாரஸ்யமானவை.

காரியாம்சயில் கவனித்தால் இந்திய, பர்மா கடற்படையைச் சேர்ந்த கடற்கரையில் நடமாடும் நீராவிப் படகுகள் அதிவேகமாகவும் உபயோகமுள்ளவகையிலும் வேலை செய்திருக்கின்றன. ஏராளமான வெற்றிகளையும் பெற்றிருக்கின்றன. எதிரியின் கப்பல்களை நாசமாக்கியும் தரையிலுள்ள கேந்திரஸ்தானங்களையும் நொருக்கியிருக்கின்றன.

குட்டையான, சாய்ந்தவடிவமுள்ள இந்தப்படகில் சக்தியுள்ள என்ஜின்களும் ஆயுதங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் சிலவற்றை இந்திய தொழிற்சாலைகள் கட்டுகின்றன. இவைகளிலுள்ள பிரிடிஷ் இந்திய, பர்மிய உத்தியோகஸ்தர்களும், வேலைக்காரர்களும் அடிக்கடி தங்களுடைய தீரத்தையும் பயிற்சியின் சிலாக்யத்தையும் வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

### வெற்றிகரமான தாக்குதல்கள்.

இவர்களுடைய நடவடிக்கைகளில் சிலாக்கியமான சிலவற்றைக்கூறுவோம். ஆக்யாபுக்குத் தென்கிழக்கே 50 மைலிலுள்ள ஹண்டர்ஸ் விரிகுடாவில் ஜப்பானியரின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட மைபான் என்னும் பிரதேசத்தை வெற்றிகரமாகத் தவிடுபொடியாக்கியது; அதே பிராந்தியத்தில் ராம்ரித்தீவுக்கப்பால் ஒரு இரவில் ஜப்பானிய உதவிப்படைகளும் வெடிமருந்து சாமான்களும் ஏறிச்சென்ற கப்பல்களில் ஒன்று அல்லது இரண்டை மூழ்கடித்தது: மாயூ தீபகற்பத்துக்கருகில் சந்திர காந்தியுள்ள இரவில் நடைபெற்ற போரில் எதிரியின் நீராவிப்படகு ஒன்றைத்தகர்த்ததும் மற்றொன்றை கடற்கரையில் போய்பதுங்கும்படி செய்ததும்; டான்பெயிக்கிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களை இரண்டு அல்லது மூன்று தடவை வெடிகுண்டுகளால் தாக்கியதும்.

மத்திய காலங்களில், எதிரிக்கு அநேக முறைகளில் அவைகள் தொந்திரவு அளித்து வந்தன. நூற்றுக்கணக்கான ஜப்பானியர்களை ஹதம் செய்திருக்கின்றன. கப்பல்கள் சேதப்பட்ட பொழுது அவைகளிலிருந்த ஜப்பானியர்களைக் காப்பாற்றியும் கைது செய்துமிருக்கின்றன.

### போக்குவரத்துக்கு உதவி.

பகிரங்கமாகயில்லாமல் ஆனால் மிகவும் முக்கியமான அலுவல்களைச் செய்துவரும் வேவலின் கடற்படையைச் சேர்ந்த சிறிய படகுகள் நாப்நதியிலும் இதர இடங்களிலும் ஆயிரக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள ஸப்ளைகளையும் மனிதர்களையும் இங்குமங்கும் ஏற்றிக்கொண்டுபோயிருக்கின்றன. அவைகளிலிருக்கும் இந்திய வேலைக்காரர்களும் சந்தர்ப்பம் வாய்த்துவிட்டால் தீரமாக யுத்தம் செய்வார்களென்பதும் சிலநாட்களுக்குமுன் புலப்பட்டது. 120 அடி நீளமுள்ள இரண்டு படகுகளை பத்து ஜப்பானிய விமானங்கள் தாக்கின. படகுகளிலுள்ள யந்திர பீரங்கிகள் விமானங்களைச் சுட்டன. அதன் பயனாக ஒரு ஜப்பானிய வெடி விமானம் நொருங்கி நதியில் விழுந்தது. மற்றொரு விமானம் பழுதுபட்டு ஓடிவிட்டது.

பிரிடிஷ், இந்திய தரைப்படைகளுக்கு உதவியாக நடைபெற்ற இந்த தீரச்செய்கைகளில் ஆள் சேதம் ஒன்றுமில்லை. படகுகளுக்கும் சில்லரைச் சேதம்தான் ஏற்பட்டது. ஐந்தொகை போட்டால் நமக்கு லாபம் கிடைத்ததென்று தான் சொல்லவேண்டும்.

---

# பிரெஞ்சு கொரில்லாப் படைகள். ஸ்திரீகள் வகுப்பு.

## ஸ்திரீகள் குடைகள்மூலம் இறங்குகிறார்கள்.

பிரெஞ்சு அயல்நாட்டு படைகளின் அமெரிக்க காப்டனான டக்ளஸ் ஸ்மித் சிலருக்கு பேட்டியளித்தபொழுது, பிரான்ஸில் ஸ்திரீகள் குடைகள் மூலம் இறங்கி ரகசியமான நடவடிக்கைகளையும் கொரில்லாச் சண்டையையும் செய்து வருகிறார்களென்று சொன்னார்.

ஸ்மித் சமீப காலத்தில் அல்ஜியர்ஸிலிருந்து திரும்பி வந்தவர். ஒவ்வொரு நாளும் ஆண்களும், பெண்களும் கள்ளத்தனமாக, சிலர் குடைகள் மூலமாகவும், சிலர் துருப்பேற்றிச் செல்லும் விமானங்கள் மூலமாகவும், இன்னும் சிலர் நீர்மூழ்கிகள் மூலமாகவும் பிரான்ஸுக்குப் போய்ச் சேருகிறார்கள் என்று அவர் சொன்னார். இருட்டு சமயத்தில் பிரான்ஸுக்குள் புகுந்து விடுவதற்கும் ரேடியோ மூலம் தகவல்களை அனுப்புவதற்கும் அவர்கள் பயிற்சிபெற்று வருகிறார்கள். சிறிய துருப்பு கோஷ்டிகளை இவர்கள் தாக்குகிறார்கள். பாலங்களைத் தகர்த்து விடுகிறார்கள். ரஸ்தாக்களை உடைத்துவிடுகிறார்கள். பாதுகாப்புத் துருப்புகளைக் கொன்று விடுகிறார்கள். மேலும், ரயில்வண்டித்தொடர்களையும், ரயில்வே ஜங்ஷன்களையும் நொருக்கி விடுகிறார்கள். வெடி மருந்து, பெட்ரோலிருக்கும் கிட்டங்கிகளுக்குத் தீ வைத்துவிடுகிறார்கள்.

ஆல்ஜியர்ஸின் கவர்னரான ஜெனரல் காட்ருவின் ஏவலின்பேரில் காப்டன் ஸ்மித் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். பிரான்ஸின் கொரில்லாத் துருப்புகளின் வேலைத் திறமையை நேசநாடுகள் இப்பொழுதுதான் அறிந்தார்களென்றும் அவர் சொல்லுகிறார்.

---

# விமானங்களிலேயே ஆஸ்பத்திரி.

(டெய்லி மெயில் பத்திரிகை).

ஆபிரிக்க யுத்த அரங்கங்களிலியிருந்து 18,000 காயமடைந்தவர்களும், நோயாளிகளுமான நேசதேச உத்தியோகஸ்தர்களும் இதர சைனியத்தைச் சேர்ந்தவர்களும் பெரிய விமானங்களின் உதவியால் சிகித்ஸைக்கு கொண்டுபோகப்பட்டனர். அமெரிக்க விமானப் படையின் டாக்டராக இருக்கும் பிரிகேடியர் ஜெனரல் டேவிட் கிராண்ட் என்பவர்தான் இந்தவிதமாய் வெளிப்படுத்தியவர். ஜெனரல் கிராண்ட் நியூயார்க்கிலே பேசியபொழுது, "விமானத்தின் உதவியால் காயமடைந்தவர்கள் வெளிப்படுத்தப்படுவது வருங்காலத்தில் அதிகமாய் இருக்கும். விமானத்தின் உதவியால் நோயாளிகளை சிகித்ஸைக்காக அப்புறப் படுத்துவதால் அதிகமான உயிர்கள் காப்பாற்றப்படமுடியும். இந்த யுத்தம் எங்கும் பறந்து நடப்பதால் உலக யுத்த காலங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட யுத்த தளங்களுக்கு அருகில் இருக்கும் ஆஸ்பத்திரிகள் பிரயோஜனப்பட மாட்டா. பெரிய அத்தகைய ஆஸ்பத்திரி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பேர்க்கப்படாதாய் இருப்பதால் எதிரிகளால் செய்யப் படும் திடீர் தாக்குதல்களுக்கு இலக்காகி அவர்கள் கையில் சிக்கிவிடும்.

"பெரிய வியாபார விமானங்களையெல்லாம், ஆஸ்பத்திரிகளுக்கும், பின் அவர்கள் நாட்டிற்கும், நோயாளிகளையும் காயமடைந்தவர்களையும் எடுத்துச் செல்வதற்குப் போதுமான துணையோடும், வைத்தியர்களோடும் உடைய வைத்திய விமானங்களாக மாற்றியிருக்கிறோம். நமது விமானிகள் அவர்களின் வியாபார விமானங்களை யுத்தம் நடக்கும் இடங்களுக்கு எடுத்துச்சென்று, அங்கிருந்த மனிதர்களை ஏற்றிக்கொண்டு திரும்புகிறார்கள். இத்தகைய வைத்திய விமானங்களிலே, ஒரு டாக்டரோ, அல்லது சேனையைச் சேர்ந்த நர்ஸோ இருக்கிறார்கள். அவர்களுடன் வைத்திய இலாகாவைச் சேர்ந்த பெரிய உத்தியோகஸ்தர் ஒருவரும் அவ்விமானங்களிலே இருப்பார். அவர்கள் வேண்டிய அளவு வைத்தியம் செய்தும், ரத்தமில்லாதவர்களுக்கு ஊசியின்மூலம் ரத்தம் ஏற்றியும், பிராண வாயு கொடுப்பதின் மூலமாயும் பல உயிர்களைக் காப்பாற்றுவார்.

சில நாட்களில், ஒரு தடவையில் வைத்திய ரயில்களால் ஏற்றிச்செல்லப்படுவதுபோல் 3 மடங்கு அதிகமான 600 நோயாளிகளையும் நாங்கள் எடுத்துச் சென்றிருக்கிறோம்.

"இம்மாதிரியான வைத்தியம் நன்றாகச் செய்வது ஒருபுறமிருக்க, காயமடைந்தவர்களை யுத்தம் நடக்கும் பிரதேசங்களிலிருந்து சமாதானம் நிலவும் இடங்களுக்கு ஏற்றிச் செல்வதில் ஒரு மனச்சாந்தியும் ஏற்படுகிறது. ஒரு காயமடைந்த மனிதனுக்கு சுத்தமானதும், சௌக்கியமானதுமான சமாதானம் நிலவும் பிரதேசங்களிலே, எல்லாவிதமான தற்கால மருந்துகளின் உதவியோடு பத்திரமாக இருப்பதாக நினைப்பதானது கூடிய சீக்கிரம் தான் சொஸ்தப்படுத்தப் படுவோம் என்ற நம்பிக்கையை அதிகப்படுத்துகிறது. துருப்புகள் காயமடைந்தால், உடன் காலத்தில் சிகித்ஸை செய்வதற்கு வேண்டிய வழிகள் எல்லாம் சுலபமாய் செய்யப்படும் என்று அவர்கள் தெரிந்துகொள்வதால் அத்துருப்புகளின் தைரியமும் அதிகப்படுகிறது.

"ஆஸ்பத்தி சௌகரியங்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அவசியம் ஏற்பட்ட காலத்தில் ஆபிரிக்க யுத்த அரங்கத்திலிருந்து மாற்றியபோது, நோயாளிகளை அப்புறப்படுத்திய வேலை செய்ததன்னியில் விமானங்கள் 250 நோயாளிகளிக்கு படுக்கையோடு கூடிய ஆஸ்பத்திரியையும் சீக்கிரத்தில் மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு உதவியாயிருந்தது" என்றும் சொன்னார்.

ஜெனரல் கிராண்ட் 91,000 காயமடைந்த அமெரிக்க சைனியங்களில் 15,000 பேர்கள் தான் இறந்தார்கள் என்பதை ஞாபகப்படுத்தினர். "இவ்விதமாய் குறைந்த சாவு ஏற்படு வதற்கு ரத்தமில்லாதவர்களுக்கு ரத்தம் ஏற்றுதல், அபாயமில்லாத இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு சீக்கிரத்தில் அப்புறப்படுத்தல் சல்பா மருந்து கொடுத்தல் (sulpha drugs) ரண வைத்தியம் ஆகிய நான்கு முக்கியமான விஷயங்கள்தான் காரணம்'' என்றும் சொன்னர்.

---

# இந்தியக் கடற்படை.

நேசதேசங்களின் யுத்த முயற்சிக்கு ஒத்தாசை செய்யும் முறையில் இந்தியாவிலுள்ள கப்பல் தளங்களை மற்ற தேசக் கடற்படைகளும் உபயோகிக்கும்படி அனுமதித்திருப்பது பேருதவியாகும். யுத்த ஆரம்பம் முதல் இந்த வசதிகளை மற்ற தேசங்கள் பிரயோஜனப் படுத்தியிருக்கின்றன. சிங்கப்பூரின் வீழ்ச்சிக்குப்பின் இவைகளின் உபயோகம் அதிகரித்து விட்டது.

## இந்தியாவில் கப்பல் கட்டுதல்.

ஐரோப்பியப் போர்களில் ஈடுபட்டிருந்த யுத்தக் கப்பல்களெல்லாம் 17-வது நூற்றுண்டு முதலே இந்தியாவில் கட்டப்பட்டு பழுதுபார்க்கப்பட்டன. ஒரு துறைமுகத்தில் கப்பற் தளத்தின் பிரதேசத்தை 200 வருஷங்களுக்குமுன் கப்பல்கட்டும் வேலையிலீடுபட்ட பார்ஸீ வம்சத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற ஒருவர் தேர்ந்தெடுத்தார். அந்த தளத்தில் இந்தியாவுக்கும், பிரிடிஷ் கடற்படைக்கும், தேவையான யுத்தக் கப்பல்கள் கட்டப்பட்டன.

நடைபெறும் யுத்தத்தில் இந்திய கப்பல் தளங்கள் இந்தியக் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்கு உபயோகப்படுவதுடன், பிரிடிஷ் கடற்படை, நேசதேசக் கடற்படைகளின் யுத்தக் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கும் திருத்தியமைப்பதற்கும் வசதியளிக்கின்றன. ஒரு சமயத்தில் அநேக தேசங்களின் கொடிகள் ஒரு கப்பல் தளத்தில் காணப்பட்டன. அத்துடன் வெண்கொடியும் பறந்தது. தளத்தில் ஆயுதங்கள் யந்திரங்களின் வேலை செய்யும் சப்தமும் இந்தியத் தொழிலாளர்கள் கப்பல்களின் தேவைக்குத் தகுந்தபடி தங்களுடைய வேலைத் திறமையைக் காட்டுவதும் காணப்பட்டன. சமீப காலத்தில் இந்த வேலை ஏராளமாக அதிகரித்துவிட்டதால் சில வேலைகள் சொந்தமாக வைத்திருக்கும் தொழிற்சாலைகளுக்கு மாற்றப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. அந்த வேலைகளும் இந்தியக் கடற்தள உத்தியோகஸ் தர்களின் கவனத்துக்குட்பட்டுத்தான் நடைபெற்றன.

நவீன முறையில் கட்டப்பட்ட யுத்தக் கப்பலைச் சீர்திருத்தி அமைப்பதற்கு அவசியமான நுட்பமான யந்திர சாதனங்கள் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வருகின்றன. ஆகிலும் இந்தியத் தளவாடங்களும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முஸ்தீப்புகளும், லக்ஷக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள இந்திய எஃகும் ஏராளமான மொரும்பும், இதர சாமான்களும் ஒவ்வொரு மாதமும் உபயோகப்படுத்தப்படுகின்றன. கடற்கரையில் வைக்கக்கூடிய யந்திர சாதனங்களும், நீராவிக் கப்பல்களும், இதர சிறிய படகுகளும் இந்தியாவில் தயாரிக்கப் படுகின்றன.

## சிறந்த ஏற்பாடு.

கப்பல்கட்டும் தளமென்பது சிறந்த சமாஜம். இந்தியாவில் ஒவ்வொரு பகுதியாரும் வேறுபட்ட வேலைகளுக்குறித்ததான புத்திசாலித்தனத்தையும் யந்திர வேலையில் நைபுண் யத்தையும் காண்பித்துவருகிறார்கள். கப்பல் கட்டும் இலாகா கப்பலின் யாக்கையைப் பழுது பார்ப்பதில் ஈடுபட்டிருக்கிறது. இஞ்ஜினியரிங் இலாகா, இஞ்ஜின்களையும், பாயிலர்களையும், பீரங்கிகளையும் கவனித்துவருகிறது.

## மின்சார இலாகா.

நவீன யுத்தக் கப்பல்களில் மின்சாரத்தின் உபயோகமும் அதிகரித்திருக்கிறது. மின்சார இலாகா இது சம்பந்தமான அலுவல்களைக் கவனித்துவருகிறது. சாமான்கள் சேமிக்கும் இலாகா ஏராளமான பலவகைப்பட்ட சாமான்களைச் சேமித்து வைத்திருக்கிறது. கப்பலுக்குத் தேவையான யுத்த தளவாடங்களை ஈட்டும் வேலை பீரங்கிப்படையாளரைச் சேர்ந்தது.

தொழிலாளர்களும், வேலைகளுக்குத் தகுந்தபடி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக் கிறார்கள். இந்த வேலைக்காரர்களின் க்ஷேமத்தைக் கவனிக்கும்பொருட்டு வெல்பேர் சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வேலைக்காரர்களுக்கு இலவச வைத்திய வசதியும், இதர வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

### கடற்படை வைத்தியசாலை.

பம்பாயில் இந்தியக் கடற்படைக்குத் தனிப்பட்ட வைத்தியசாலை யிருக்கிறது. இதில் கடற்படை டாக்டர்களும், தாதிகளும், கடற்படையைச் சேர்ந்த வேலைக்காரர்களும் வேலை செய்வார்கள்.

ஆஸ்பத்திரியில் காது, மூக்கு, தொண்டை, கண், முதலிய இந்திரியங்களைப் பற்றிய வியாதிகளுக்கு சிகிச்சை செய்யப்படும். Xray போட்டோ பிடிக்கும் கருவிகளும் ரசாயன பரீக்ஷை சாலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதை வினை தேர்ச்சிபெற்ற அநேகர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தப் புதிய ஆஸ்பத்திரி ராமேஷ்பிரெம் சண்ட் ஸானடோரியம் இருந்த கட்டடத்தில் நிர்மாணிக்கப்படும்.

### கடற்படைக்குச் சில்லரை விளையாட்டு வசதிகள்.

இந்தியக் கடற்படையிலுள்ள எல்லோருக்கும் விளையாட்டு வசதிகளும் பொழுதுபோக்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆண்கள், பலர்கூடி விளையாடும், கால்பந்து; ஹாக்கி, கிரிக்கட், வலைப்பந்து முதலிய விளையாட்டுகளில் ஈடுபடுகிறார்கள். உள்நாட்டு விளையாட்டுகளுமான, குத்துச்சண்டை, மல்யுத்தம், பூப்பந்து, கஸரத்து முதலியவைகளுக்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. நீந்தி விளையாடும் முறைகளும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கடற்படைப் பகுதியிலும் விளையாட்டு அதிகாரி ஒருவருண்டு. இவர் நன்றாய் விளையாடுகிறவர்களைத் தேர்ந்தெடுப்பார். ஹாக்கி விளையாட்டை எடுத்துக்கொள்ளுவோம். புதிதாக விளையாட ஆரம்பித்தவனுக்கு ஹாக்கிக் குச்சியை எவ்விதம் உபயோகிப்பதென்பது தெரியாது. அவனுக்கு விளையாடும் முறைகள் கற்பிக்கப்பட்டு அவன் துரிதமாக முன்னேறிச் செல்லும் நபராகவோ அல்லது அவனுடைய சாமர்த்தியத்துக்குத் தக்கவாறு மற்ற வேறு ஸ்தானங்களிலோ விளையாடும்படி தயாராகிவிடுகிறான்.

உத்தியோகஸ்தர்களும், வேலைக்காரர்களும் ஒரே கக்ஷியில் கலந்துநின்று விளையாடுவார்கள். கடற்படையில் வேலைக்காரர்களின் பொழுதுபோக்குக்கு ஆபீஸர் ஏற்பாடு செய்வதுடன் விளையாட்டுகளில் அவனும் ஒரு பங்கெடுத்துக்கொள்ளுகிறான்.

ஒரு பெரிய நகரத்தில் இந்தியக் கடற்படைக்கு பலவிதமான வசதிகளும், இயற்கையழகு அமைந்த ஒரு விளையாட்டு ஸ்தலமிருக்கிறது. பின்புறம் பனை மரங்களும், பசும்புல் தரையும் அமைந்தும் சமுத்திரத்திலிருந்து கொஞ்சதூரத்திலும் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் விளையாடுகிறவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் வைக்கப்பட்டிருக்கிறது. கடற்படை இலாகாக்கள் சேர்ந்து ஹாக்கி விளையாடும் சங்கம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் அநேக விளையாட்டு கோஷ்டிகளிருக்கின்றன. இந்த கோஷ்டிகள் ஒன்றோடொன்று பந்தய விளையாட்டுகளிலீடுபடுகின்றன.

பொழுது போக்குக்காகக் கால்பந்து விளையாட்டும் நடைபெறுகிறது. இந்திய சமிக்ஞை பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்கள் கடற்படையைச் சேர்ந்தவர்களுக்குள் நடைபெற்ற பந்தயத்தில் வெற்றிபெற்றார்கள்.

கல்வி சம்பந்தமாகவும், நாடக சம்பந்தமாகவும் விவாத கோஷ்டிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கப்பல் வேலைக்காரர்கள் வாரம் ஒரு முறை இவைகளில் கலந்துகொள்ளுகிறார்கள். கீர்த்திபெற்ற இந்தியக் கப்பல் ஒன்றில் பஞ்சாபைச் சேர்ந்த ஒரு சிறிய உத்தியோகஸ்தர் கல்வி சம்பந்தமாகவுள்ள சங்கத்தின் ஊதியம் பெறாத காரியதரிசியாக வேலை பார்த்துவருகிறார். கடலில் பிரயாணம் செய்யும்பொழுது ஜனங்களின் பொழுதுபோக்குக்காக உபந்யாசங்களும், சங்கீதக் கச்சேரிகளும், நாடகங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்தியாவிலுள்ள ஒரு நகரத்தில் பயிற்சிபெறும் கப்பல் வேலைக்காரர்கள் வாரம் ஒரு முறை சினிமாப் படக்காக்ஷிககு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. பொழுதுபோக்கு உத்தியோகஸ்தர் செய்துவரும் முயற்சியுடன், உள்நாட்டிலும் உபசரணைக்கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, அது விருந்துகோஷ்டிகளும், பாட்டுக்கச்சேரிகளும் நடைபெறும்படி முயற்சி செய்துவருகிறது.

---

## உணவுப்பொருள்களை அதிகப்படுத்துங்கள்.

யுத்தம் நடந்துவரும் இக்காலத்தில் தோட்டங்களை உடையவர்கள் காய்கறிகளை விளைவிக்க வேண்டியிருக்கும். தோட்டங்களில் பூச்செடிகளை பயிர்செய்யாமல் காய்கறிகளை உற்பத்தி செய்யவேண்டும். ஒவ்வொருவரும் அவரவர்கள் வீட்டிற்கு வேண்டிய அளவு காய்கறிகளை முடிந்தவரையில் தங்கள் தோட்டங்களில் உற்பத்தி செய்துகொண்டால், தோட்டங்கள் இல்லாதவர்கள் கடைவீதிகளில் காய்கறிகளை அதிகமாய் வாங்கிக்கொள்ளமுடியும்.

உன்னிடத்தில் ஒரு தோட்டம் இருந்தால் காய்கறிக் குறைவை நிவர்த்திசெய்ய உடனே காய்கறிகள் உற்பத்தி செய்யப் பிரயத்தனப்படு. காய்கறிகளும் சீக்கிரத்தில் உற்பத்தியாகும்,

பழங்களும் குறைந்த சிரமத்தோடு தயார்செய்துவிடலாம். சில மாதங்களில் நீ அவைகளைப் பார்த்து மகிழ்வாய். உன் குழந்தைகளையெல்லாம் தோட்டங்களிலே பாடுபட உற்சாகமூட்டு. அதன் பயனாய் சத்துள்ள உணவுப்பொருள்களை நீ அடைவாய். ஒரு நகரத்தின் மத்தியில் உள்ள சிறு இடமாயிருந்தாலும், அந்த இடத்தில் விளைபொருள்களை உற்பத்திசெய்ய ஆர்வம் உண்டாகவும் அதன் பயனை அறிந்துகொள்ளுமாறும் உன் குழந்தைகளுக்கு நீ போதி.

ஒரு ஏக்கரா நிலத்தில் விளைவித்த உருளைகிழங்குகள் ஒரு ஏக்கரா நிலத்திலே விளைவிக்கப்பட்ட கோதுமைகளைப்போல் 2 பங்கு உணவுப்பொருள்களை கொடுக்கிறது.

3 அவுன்ஸ் மொச்சை விரை 100 முதல் 150 பவுண்டு வரை நிறையுள்ள மொச்சைக் காய்களை உற்பத்தி செய்யும்.

காய்கறிகள் உன்னை பலஹீனத்தினின்றும், வியாதிகளினின்றும் காப்பாற்றி நல்ல ரத்தத்தையும் பலத்தையும் தருகிறது.

காலத்திற்கேற்றவாறும், நிலத்திற்கேற்றவாறும், கீழ்கண்ட காய்கறிகளையும், பழங்களையும், நகரங்களிலுள்ள தோட்டஙகளிலே உற்பத்தி செய்யமுடியும்.

## காய்கறிகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உருளைக்கிழங்கு. | வெங்காயம். | பிரஸ்ஸல் ஸ்பரௌட்ஸ். | காலிபிளவர். | மாரோ. |
| சர்க்கரைவல்லிக் கிழங்கு. | தானியங்கள். | வெண்டைக்காய். | காரட். | லெட்டூஸ். |
| ரேடிஷ். | பட்டாணி. | ஆர்வி (கோயான்). | டர்னிப். | வெள்ளரிக்காய். |
| பீட்ரூட். | மொச்சை. | ஆர்ட்டிசோக். | பஸளை. | |
| | கோஸ். | | கத்தரி. | |

## பழங்கள்.

பணாணா. பாபெயா. கோவா. மெலென். பைன் ஆப்பிள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 155 (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 21- 7-43 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 10.45 |
| 18- 7-43 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 10.45 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 | ,, | குழிபிறை | ... மாலை | 7.00 |
| 19- 7-43 | வெங்களூர் | ... ,, | 7.00 | ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனுபட்டு | ... ,, | 7.30 | 22- 7-43 | களமாவூர் | ... ,, | 7.00 |
| 20- 7-43 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 | ,, | நல்லூர் | ... ,, | 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 | 23- 7-43 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| 21- 7-43 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 | | | | |

### பிரஸங்கம் 156. (1-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 28- 7-43 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 10.45 |
| 25- 7-43 | சூரக்காடு | ... ,, | 7.00 | ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 10.45 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 | ,, | ராமச்சந்திரபுரம் | ... மாலை | 7.00 |
| 26- 7-43 | திருவரங்குளம் | ... ,, | 7.00 | ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| ,, | வம்பன் | ... ,, | 7.30 | 29- 7-43 | விராலிமலை | ... ,, | 7.00 |
| 27- 7-43 | மழையூர் | ... ,, | 7.00 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 | 30- 7-43 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 28 -7-43 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 | ,, | எம்பல் | ... ,, | 7.30 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 17— 7—43 | திருமயம். | 24— 7—43 | வெட்டம்விடுதி. |
| 18— 7—43 | தீத்தான்விடுதி. | 25— 6—43 | மருதன்கோன்விடுதி. |
| 19— 7—43 | முள்ளங்குரிச்சி. | 26— 5—43 | கொன்னையூர். |
| 20— 7—43 | வடகாடு. | 27— 6—43 | பேராம்பூர். |
| 21— 7—43 | கீழாநிலை-புதுப்பட்டி. | 28— 6—43 | கரம்பக்குடி. |
| 22— 7—43 | கீழாநிலை | 29— 7—43 | குழிபிறை. |
| 23— 7—43 | புதுக்கோட்டை. | 30— 7—43 | புதுக்கோட்டை. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—21-7-43.